Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 06 (08.06.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 247

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-892)

## நோர்வே முக்கியஸ்தர்கள் ரோக்கியோ செல்லவில்லை?

(கொழும்பு)

ஜப்பானியத் தலைநகர் ரோக்கியோவில், நாளை ஆரம்பமாகவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில், நோர்வேயின் சார்பில் முக்கிய பிரமுகர்கள் எவரும் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று தெரியவருகிறது.

மேற்படி மாநாட்டில் - விடுதலைப் புலிகள் பங்குபற்றாமையினால், நோர்வே அரசின் முக்கிய பிரமுகர்களும் இம்மாநாட்டில் பங்குபற்றுவதைத் தவிர்க்க விரும்புவதாகவும் தெரியவருகிறது.

எனினும், நோர்வே அரசின் சார்பில் - கனிஷ்ட இராஜதந்திரிகள் சிலர் இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. (200)

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் முக்கிய உரையும் ரத்தானது!

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டில், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நிகழ்த்தவிருந்த முக்கிய உரை ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

நாளை நடைபெறவிருக்கும் இம்மாநாட்டின்போது, இலங்கைக்கு வழங்கப்படவேண்டிய உதவிகள் குறித்தும் மற்றும் தற்போதைய அரசியல் விவகாரங்கள் குறித்தும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தவிருந்தார்.

எனினும் - விடுதலைப் புலிகள் இம்மாநாட்டில் பங்குபற்றாமையைத் தொடர்ந்து அமைச்சரும் தனது உரையை ரத்துச்செய்துவிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே, இம்மாநாட்டில் திட்டமிட்டபடி தனது உரையை நிகழ்த்தவுள்ளார் என்று தெரியவருகிறது. (200)

# இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதற்கு தெளிவான, உறுதியான வரைபை தரவேண்டும்!

## அறிவிப்புக்கள் மட்டும் போதாது என்கிறார் பாலா

(லண்டன்)

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அரசாங்கம்- உரிய தெளிவான, உறுதியான வரைபைச் சமர்ப்பிக்கும் மாத்திரத்திலேயே - விடுதலைப் புலிகள் அத்தகைய நிர்வாகம் பற்றிப் பேசுவார்கள் என்றும், அப்படியானால் மட்டுமே பேச்சுக்கள் பயன் தரக்கூடியதாக அமையும் எனவும் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உறுதிபட அறிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கையளிப்பதற்கு சம்மதம் தெரிவிப்பதாக அரசாங்கம் கூறியிருப்பது பற்றி, 'தமிழ்நெற்' இணையத்தளம் - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"பொருத்தமான இடைக்கால நிர்வாகம் பற்றி, அரசாங்கம் கருத்துக் கொண்டுள்ளது - ஆனால், இது பற்றி நேரில் பேசப்படவேண்டும்.

கடிதங்களைப் பரிமாறுவதன் மூலம் முடிவுகள் கிடைக்கும் என்று நான் கருதவில்லை" எனப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க கூறியிருப்பது பற்றிக் கருத்துத் தெரிவித்த, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் -



இவ்வாறான அறிவிப்புக்கள் மட்டும் பேச்சுக்களுக்கு ஆதாரமாக இருக்கமுடியாது எனத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோ செல்வதா இல்லையா குழம்பிய நிலையில் இந்தியத்தரப்பு!

ரோக்கியோ மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளமாட்டாது என்று தெரியவருகிறது.

ஏற்கனவே, முதலிலும் - இம்மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்ற நிலைப்பாட்டில் இந்தியா இருந்தது. ஆனால் - விடுதலைப் புலிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளாததையடுத்து இம்மாநாட்டுக்குச் செல்வது என்று இந்திய அரசு தீர்மானித்திருந்தது.

எனினும் - தற்போது திடீரென தனது முடிவில் மீண்டும் மாற்றம் செய்துகொண்டுள்ளது இந்தியா.

இதன்படி - இம்மாநாட்டுக்குப் பிரதிநிதிகள் எவரையும் அனுப்புவதில்லை என்று இந்தியா தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை - இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் மேற்படி மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி, திங்கட்கிழமை காலைதான் கூறமுடியும் என இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி நட்வர் சிங் சர்மா தெரிவித்துள்ளார். (200)

## ஈ.பி.டி.பியிலிருந்து விலகிய நபர் சூட்டுக்குப் பலி!

திருகோணமலை நகரப்பகுதியில் உள்ள உணவு விடுதி ஒன்றில் வைத்து இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருந்து விலகிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ரோக்கியோ புறப்படுவதற்கு முன்னர்

## சந்திரிகாவைச் சந்திக்கும் ரணிலின் முயற்சி தோல்வி!

(கொழும்பு)

ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்வதற்கு முன்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கு முயற்சி செய்தபோதும், ஜனாதிபதி சந்திரிகா அதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கவில்லை என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேரில் சந்தித்துப் பேச நேரம் ஒதுக்கித் தரப்படாத நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி மூலம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றிரவு கிரனைட் வீச்சில் இருவர் காயம்!

தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் வீட்டின் மீது, இனந்தெரியாதோர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில்- தர்மகர்த்தா சபைத் தலைவரும், அப்பகுதிக் கிராம அலுவலர் ஒருவரும் காயமடைந்தனர்.

நேற்றிரவு 8.50 மணியளவில், திருகோணமலை பிரதான வீதியில் உள்ள இவரது வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் கரையொதுங்கிய 15 அடி நீளமான டொல்பின்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, ஆதிகோவில் கடற்கரையில் - டொல்பின் ரக மீன் ஒன்று கரையொதுங்கியது. நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் கரையொதுங்கிய இம்மீன், சுமார் 15 அடி நீளம் உடையது.

இம்மீனைப் பார்ப்பதற்குப் பெருமளவு பொதுமக்கள் அவ்விடத்திற்குச் செல்கின்றனர்.

இதுபற்றி அறிந்த வல்வெட்டித்துறைப் பொலிசார் - அங்கு விரைந்து, அம்மீனை வெட்டவேண்டாம் எனவும், புதைக்குமாறும் கேட்டுள்ளனர். இந்த மீனின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவாகும் என கடற்தொழிலாளர்கள் கருதுகின்றனர். (124)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, சோபை இழக்குது ரோக்கியோ எண்டு சொல்லுங்கோவன்...

## தனியான அரசியல் விவகார அலுவலர் பணிமனை; யாழ்ப்பாணத்தில் அமைக்கிறது அமெரிக்கத் தூதரகம்!

யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்காக, அரசியல் விவகார அலுவலர் ஒருவரை அமெரிக்கத் தூதரகம் நியமிக்கவுள்ளது.

யாழ். குடாநாடு மற்றும் வடபகுதியின் ஏனைய மாவட்டங்களிலும் கடமையாற்றக்கூடிய வகையில், இப்புதிய அலுவலரின் நியமனம் அமையும் என்று தெரியவருகிறது.

இப்புதிய அலுவலரை நியமிப்பது தொடர்பாக, கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. புதிதாக நியமிக்கப்படவிருக்கும் அரசியல் விவகார அலுவலர் - யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கடமையாற்றுவதற்காகப் புதிய பிராந்திய அலுவலகம் ஒன்றையும் யாழ்ப்பாணத்தில் அமைத்துக்கொள்வதற்கு, அமெரிக்கத் தூதரகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

அநேகமாக - இந்த அலுவலகம், யாழ். நகரப் பகுதியில், கோயில் வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் அமைக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

மேற்படி விடயம் சம்பந்தமாக, நிலைமையை நேரடியாக அவதானிப்பதற்காக, அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழு ஒன்று மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது. (க)

இப்பொழுது வடக்கிலும் - கிழக்கிலும்



GUDWIL



**புத்தம் புதிய நான்கு சில்லு டிராக்ரர்களும் உதிரிப்பாகங்களும்**

விவசாயிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட நவீன தொழில்நுட்பமும் வேகமான ஆக்கத்திறனும் கொண்ட...

2 வருட உத்தரவாதம்
ஐந்து இலவச சேவைகள்

- ☆ சுழல் கலப்பைகள்
- ☆ மண் புரட்டுக் கலப்பைகள்,
- ☆ இழுவைப் பெட்டி - உயர்ந்தி சாய்விக்கவல்லது.
- ☆ அரிசி ஆலைகள் - ஒரு தடவையில் நெல்லை செலுத்தி குற்றிய அரிசியைப் பெறலாம்
- ☆ உதிரிப் பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும்
- ☆ மூன்று வண்ணங்களில்
- ☆ பலதரப்பட்ட கருவிகள் இணைக்கலாம்.

**AMT TRANSPORT SERVICES**

பருத்தித்துறை வீதி,
இருபாலை, கோப்பாய்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்
021 222 5784

மே/பா செனிவிரட்ண
நிரப்பு நிலையம்.
மூன்றுமுறிப்பு,
வவுனியா.

(சி-1050)

BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS

ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை

**நாம் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை !!**

உங்கள் பிள்ளை 5+ முதல் 14+ வயதாயின் விசேட தனித்துவமான ஆங்கில பாடநெறிகள்

LEVELS
4 Upper Intermediate
3 Intermediate
2 Lower Intermediate
1 Foundation

EACH LEVEL 6 MONTHS



**பாலர் பாடசாலை**

சர்வதேச தரத்திற்கேற்ப நவீன கற்பித்தல் உபகரணங்களுடன் ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை

- Play Group (Kids from 2+ to 3+ Years of Age)
- Montessori School (Kids from 3+ to 4+ Years of Age)
- Pre - School (Kids from 4+ to 5+ Years of Age)



வளர்ந்தோர் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்காக பேச்சுத்திறனை குறிக்கோளாகக் கொண்ட ஆங்கில பாடநெறிகள்

Certificate in English | Diploma in English | Advanced Diploma in English

IELTS பாடநெறிக்கான வகுப்புக்கள் இம்மாதம் ஆரம்பமாகின்றன.

British BUSINESS SCHOOL
Where Students Come First

**BRITISH BUSINESS SCHOOL**

JAFFNA CITY CAMPUS : 140, Temple Road, Jaffna.
JAFFNA KACHCHERI CAMPUS : 174, Kandy Road, Jaffna.
NALLUR CAMPUS : 174/16, Temple Road, Jaffna.
PHONE : 021 222 5796

(368)

# சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு மூன்று வாரங்கள் தேவையா?

## பிரதமரிடம் சந்திரிகா கேள்வி எழுப்பியுள்ளார்



அரசாங்க வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்கத் தொடர்புசாதன அமைச்சர், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தடைவிதித்தது தொடர்பாக - சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு மூன்று வாரங்கள் தேவையா என்று - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அமைச்சர் இம்தியாஸ், வர்த்தமானி உத்தரவைப் பிரசுரிக்காமல் தடுத்தது குறித்து, தமக்குக் காரணங்களை விளக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே இரண்டு கடிதங்களை, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியிருந் தார்.

இந்தக் கடிதங்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பதில் கிடைக்காத நிலையில்தான் - ஜனாதிபதி மூன்றாவது கடிதத்தை அனுப்பிவைத்தார்.

இந்தக் கடிதத்திலேயே - வர்த்தமானி உத்தரவைப் பிரசுரிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறதா என சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு மூன்றுவார காலம் தேவையா என, ஜனாதிபதி சந்திரிகா கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், இது திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற தாமதம் என்றும், இதனைத் தம்மால் ஏற்க முடியாது என்றும், அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சில அமைச்சர்கள் அரசாங்க அச்சகத்தைத் தாக்கி அதை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தது



குறித்து, தமக்குத் தெரியும் என்றும் அவர்கள் மீது கட்டாயம் தான் நடவடிக்கை எடுப்பேன் என்றும், பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)



சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் குறித்து 'நமது ஈழநாடு' ஊடகவியலாளர்களுக்கு ஐ.சி.ஆர்.சி பிரதிநிதிகள் விளக்கமளிப்பதைப் படங்களில் காணலாம்.

# மூன்றாம்நிலைக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்!

## ஜே.வி.பி. சார்பு மாணவர் அமைப்பு போராட்டத்துக்கு முஸ்தீபு

மூன்றாம் நிலைக்கல்விக்கு அரசாங்கம் உரிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதில்லை என்று கூறி, சகல பல்கலைக்கழகங்களிலும் ஒரு வார கால எதிர்ப்புபபோராட்டம் ஒன்றை நடத்த ஜே.வி.பி. சார்பு மாணவர் அமைப்பு திட்டமிட்டு வருகிறது.

ஒருவார காலம் பல்கலைக்கழகங்களைப் புறக்கணித்து மாணவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை - மூன்றாம் நிலைக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் அரசாங்கம் எந்த பாரபட்சத்தையும் காட்டவில்லை என்று, மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க விசா வழங்கும் பிரிவு மீண்டும் நாளைமுதல் செயற்படும்!

## ஃபக்ஸ் மூலம் இனி விண்ணப்பிக்கலாமாம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் விசா வழங்கும் பிரிவு, சில நடைமுறை மாற்றங்களுடன் மீண்டும் செயற்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் இந்தப் புதிய நடைமுறைக்கேற்ப அமெரிக்கத் தூதரக விசா வழங்கும் பிரிவு செயற்படும். இதன்படி, இலங்கையர்கள் - அமெரிக்காவுக்கான சுற்றுலா விசாவுக்கு விண்ணப்பிப்பதற்குத் தூதரகத்துக்கு நேரடியாகச் செல்ல வேண்டியதில்லை.

தமது விசா விண்ணப்பங்களை 'ஃபக்ஸ்' மூலமே தூதரகத்துக்கு அனுப்பவேண்டும். 436943 என்ற பக்ஸ் இலக்கத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தால், இரண்டு வேலை நாட்களுக்குள், அமெரிக்கத் தூதரகம் விண்ணப்பதாரிகளுக்குப் பதிலை அனுப்பிவைக்கும்.

இதனால், நேரில் சென்று சந்திப்பதற்கோ அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரிப்பதற்கான சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

குடியகல்வு அல்லாத விசா விண்ணப்பதாரிகள் இந்தப் புதிய நடைமுறையின்படி, ஒருமுறை மட்டுமே தூதரகத்துக்கு வரவேண்டும்.

சுற்றுலா விசாவுக்கு விண்ணப்பிக்கும்போது, DS-156 இலக்க விண்ணப்பத்துடன், கடவுச்சீட்டின் பிரதி, முன்னர் விசா பெற்றிருந்தால் அது பற்றிய விபரம் போன்றவற்றை ஃபக்ஸ் மூலம் அனுப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக விசா வழங்கும் பிரிவில் பணத்துக்காக விசா வழங்கப்பட்ட மோசடிச் சம்பவம் அம்பலமானதையடுத்து, கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதிமுதல் விசா வழங்கும் நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோக்கியோவில் கிடைக்கும் நிதியுதவி அரசியலமைப்பின்படியே செலவிடப்படும்!

## அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு



(கொழும்பு)

ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பெறப்படும் நிதியுதவி, நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படியே செலவிடப்படும் என்று - பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான கைத்தொழிற்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் வைத்து செய்தியாளர் ஒருவருக்குப் பேட்டியளித்த போதே - அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

புலிகளைப் போன்ற கெரில்லா இயக்கத்துடன, அரசாங்கம் கவனமாக நடந்துகொள்ள வேண்டியநிலையில் இருக்கின்றது. பேச்சுவார்த்தைகளின் சகல கட்டங்களிலும், எல்லா நேரத்திலும் இணக்கப்பாட்டுடன் போகமுடியாது.

இரண்டு தரப்புக்களிடமும் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதும் அவசியம். விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கோரிக்கை குறித்து, அரசாங்கம் கவனமாக ஆராயவேண்டியுள்ளது.

ரோக்கியோ மாநாட்டில் கிடைக்கவுள்ள நிதியுதவி, நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட வகையிலேயே செலவிடப்படும். கிடைக்கும் அனைத்து நிதியுதவிகளுக்கும் அரசாங்கமே பொறுப்பாக இருக்கும்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நான்கு கோடி டொலர்களை அரசு செலவிட்டு - புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் மிலிந்த மொறகொ[illegible] மேலும் தெரிவித்தார்.

# மூன்று பெண்அரசியல் கைதிகள் வெலிக்கடையிலிருந்து விடுதலை

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ்ப் பெண் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ததாகக் குற்றஞ்சாட்டி, இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் கைவிடுவதாக முடிவெடுத்ததைத் தொடர்ந்தே, இம்மூன்று பெண்களும் விடுவிக்கப்பட்டனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்போது ஆறு பெண் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது வழக்குகளைத் [illegible]ாக விசா[illegible]க்குமாறு, உயர்நீதிமன்றத்திடம் மனுத்தாக்கல் செய்துள் [illegible]க்கது.

# அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி ஆறுசுற்றுப் பேச்சிலும் பேசவில்லை!

## ஜனாதிபதி தெரிவித்ததாக சரத் அமுனுகம

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்வசம் உள்ள ஆயுதங்களைக் கைவிட்டு யுத்தத்திற்கு முடிவு கட்டப்பட்ட பின்னரே, இடைக்கால நிர்வாகத்தை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்தமுடியும் என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்துக் குறித்து, செய்தியாளர்களிடம் கலாநிதி சரத் அமுனுகம விபரித்தார். அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தாவது,

ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன், அரசாங்கம் நடத்திவிட்டது. ஆனால், இதுவரை அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து எதுவுமே பேசப்படவில்லை.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாக்தைப் புலிகளிடம் எவ்வாறு கொடுக்கமுடியும்? புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு யுத்தத்திற்கு இறுதித்தீர்வு காணப்பட்ட பின்னரே, இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தலாம் என்றும், ஜனாதிபதி கருதுவதாக கலாநிதி சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

# தமிழ் மக்க[illegible] அரசியல் [illegible]

## சந்தேகம் [illegible]

தமிழ்மக்களுக்கு [illegible]
யூட்டக்கூடிய அரசி[illegible]
கொழும்பில் ஜனாதி[illegible]
காவினால் உருவாக்க[illegible]
தெரியவில்லை என [illegible]
வரும், நாடாளுமன்ற [illegible]
மான செல்வம் அ[illegible]
தெரிவித்தார்.

தற்போதைய அர[illegible]
ரம் தொடர்பாக, ரெ[illegible]
செல்வம் அடைக்கல[illegible]
தெரிவிக்கையில்,

# சமாதானத்தை வைத்தே எதிர்காலத்தில் நிதியுதவி!

## உலகவங்கிப் பிரதிநிதி அறிவிப்பு

(கொழும்பு)

சமாதானச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே, எதிர்காலத்தில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கப்படும் என்று, உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - அடுத்து 3 முதல் 4 வருட காலத்திற்குள் 1.3 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு உலகவங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தீர்மானித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க - ரோக்கியோவில் எதிர்வரும் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்தால், எதிர்பார்க்கப்பட்ட உதவிகளில் கட்டுப்பாடு விதிக்கப்படலாம் என்று, நிதிவழங்கும் பிரதிநிதிகளில் ஒருவர் கூறியுள்ளார் என - ரொய்ட்டர் தெரிவித்தது.

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்

பெயர் : சி.துவாரகன்
முகவரி : கிளானை, தெல்லிப்பளை.



### முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.பரிதி
முகவரி : இலக்குமி வாசா, வட்டு - தெற்கு, வட்டுக்கோட்டை.

### இரண்டாவது அகவையில்

பெயர் : சு.சுருதிஷாகரன்
முகவரி : நீர்வேலி வடக்கு, காளிகோவிலடி.



### மூன்றாவது அகவையில்



பெயர் : க.நவ...ரி
முகவரி : ...

---

யாழ். செயலகத்தில்

# ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடமாகியும் செயலிழந்துள்ள தகவல் பிரிவு

(கொழும்பு)

கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் யாழ். கச்சேரியில் ஆரம்பிக்கப்பட்ட தகவல்துறைப் பிரிவு செயலிழந்த நிலையிலேயே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவல்துறைப் பிரிவு கடநத வருடம் தகவல்துறை அமைச்சர், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபொழுது ஆரம்பிக்கப்பட்டது. இங்கு கடமையாற்றுவதற்கு அப்பொழுது பெண் ஊழியர் ஒருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு, ஆரம்பிக்கப்பட்ட முதல் மாதத்தில் வழங்கப்பட்ட ஊதியத்தைத் தவிர, இதுவரை ஊதியம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இப்பிரிவில் பொருத்தப்பட்டிருந்த கணினி, தொலைநகல் இயந்திரம், தொலைபேசி என்பனவும் பயன்படுத்தப்படாமல் உள்ளன. இவற்றைப்பயன்படுத்தவும் அனுமதி கிடைக்கவில்லை எனத தெரிவிக்கப்படுகிறது. இத் தகவல்துறைப் பிரிவு - குடாநாட்டுப் பத்திரிகையாளர்களின் நன்மைகருதி, அவர்களுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதனையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும் என முன்னர் தெரிவிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேசிய இளைஞர் மன்ற போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தின் வருடாந்த கலாசாரப் போட்டி இம்மாதம் இறுதியில் நடைபெறவுள்ளது.

இளைஞர், யுவதிகள் பங்குபற்றும் இப்போட்டிக்கான அழைப்பிதழ், மிகவிரைவில் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அதன்படி, அவர்கள் இப்போட்டியில் பங்குகொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவருக்கான தேர்தலில் 121 வாக்குகளைப் பெற்று, தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திலங்க சுமதிபாலவையே படத்தில் காண்கிறீர்கள்.

இத்தேர்தலில் போட்டியிட்ட அர்ஜுன ரணதுங்க 7 வாக்குகளை மட்டுமே பெற்று படுதோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

வட - கிழக்கு உள்ளூராட்சி சபைகளின்

# வேட்பு மனுக்களை ரத்துச் செய்வதான அரசின் முடிவு வரவேற்கத்தக்கதல்ல

## உயர்நீதிமன்றம் தெரிவிப்பு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச் செய்து, புதிதாக வேட்பாளர் நியமனப்பத்திரங்களைக் கோருவதென்று, அரசாங்கம் எடுத்த தீர்மானம் வரவேற்கத்தக்கது அல்ல என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சித் திருத்தச்சட்டத்திற்கு எதிராக- தாக்கல்செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது முக்கியமானதென்றும், இது தொடர்பாக உயர்நீதிமன்றம் அதன் தீர்மானத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்ற சபாநாயகர் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் திருத்தச் சட்டத்திற்கு எதிராக மனித உரிமைகள் அபிவிருத்திக்கான சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### கருத்தரங்கு

தொல்புரம் மேற்கு மற்றும் சுழிபுரம் மேற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களும், சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும் இணைந்து நடாத்தும் வாழ்வியல் நெறிபற்றிய கருத்தரங்கு, இன்று காலை 9 மணி தொடக்கம் 3 மணி வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### மரங்களை கொண்டு செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்ட காணிகளில் மரம் தறிக்கப்பட்டு, வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கான அனுமதி வனவளத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

வேறொருவருடைய காணியில் மரம் தறிக்கும்போது, பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பித்து அனுமதி பெறப்படவேண்டும். மரம் தறிக்கப்பட்ட பின்னர், அதனை வேறு இடத்திற்குக் கொண்டு செல்லும்போது, வனவளத் திணைக்களத்தில் அனுமதி பெறவேண்டும். வன...ளத்திணைக்கள அதிகாரிகள் ...ரிய இடத்திற்குச் சென்று பார்வை...டு அதற்கான அனுமதியை வழங்...ர்கள் எனத் தெரியவருகின்றது.

### ...சவநெறித் தேர்வுக்கு ...விண்ணப்பிக்கலாம்

...வபரிபாலன சபையினரால் வரு...ம் நடத்தப்பட்டுவரும் சைவ...ர்வு, இவ்வருடம் நவமபர் ...ஆம் திகதி நடைபெறவுள் ...ட்சைக்கான விண்ணப்ப...தி இம்மாதம் 30 ஆம் .... சென்றவருடம் தேர்வுக் ...ிய பாடசாலைகளுக்கு ...படிவங்கள் அனுப்பி...டுள்ளன. விண்ணப்பப் ...தவையானோர்- தேர்வுச் ... 66, கல்லூரிவீதி, நீரா...வங்களை நேரிலோ அல் ...் மூலமோ பெற்றுக் ... என்று சைவபரிபா...் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# வற்றாப்பளை பொங்கலுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்கு

## தனியார் சிற்றூர்திச் சங்கம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை அம்மன் கோவிலில், நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள பொங்கல் விழாவிற்குச் செல்லவுள்ள அடியார்களின நன்மை கருதி, விசேட போக்குவரத்துச் சேவையை நடத்த - யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

எனவே, ஆலயத்திற்குச் செல்லவுள்ள அடியார்கள் தத்தமது பகுதியிலுள்ள மினிபஸ் சங்கங்களுடன் தொடர்புகொண்டு - பயணப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும், மினிபஸ் உரிமையாளர்கள் தமது சங்கங்களினூடாகச் சேவைகளை மேற்கொள்ளுமாறும் சங்க இணையம் கேட்டுக் கொண்டுள்ளது. (க)

# மாகாணமட்ட கரப்பந்தாட்டம்; யாழ்.மாவட்ட அணி இரண்டாமிடம்!

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கு மாகாண மட்டத்தில், மாவட்ட அணிகளுக்கு இடையில், ஆவரங்கால் நடராஜராமலிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில் - இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில், யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடத்தைவென்றது.

யாழ். மாவட்ட ஆண்கள் அணி- முதல் போட்டியில் மட்டக்களப்பு அணியை 25:22 என்ற புள்ளி அடிப்படையிலும், திருகோணமலை மாவட்ட அணியை 25:23 என்ற புள்ளி அடிப்படையிலும் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதிப்போட்டியில், அம்பாறை மாவட்ட அணியிடம் 25:23 என்ற புள்ளி அடிப்படையில் தோல்வி அடைந்து இரண்டாம் இடத்தைப் பெற்றது.

யாழ்.மாவட்ட பெண்கள் அணி- இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு அணியிடம் தோல்வியடைந்து இரண்டாம் இடத்தைப்பெற்றது.

### மத்திய மாகாண முதலமைச்சராக வசந்த அலுவிகார

மத்திய மாகாணசபையின் முதலமைச்சராக வசந்த அலுவிகார நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். இம்மாகாண முதலமைச்சராக இருந்த டபிள்யூ.ஜே.எம். திசநாயக்க மரணமானதையடுத்தே, வசந்த அலுவிகார இப்பதவியைப் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

விளையாட்டு அரங்கம்

# தமிழர்களின் பாரம்பரிய மரபுவழி உடற்பயிற்சிக் கலை

(சென்றவாரத் தொடர்ச்சி)

இது தவறு. இரு கைகளாலும் கட்டைகளின் எடை, செய்முறைகளின் எண்ணிக்கையும் சமமாகச் செய்ய வேண்டும். ஒரு கை பலமாகவும், அடுத்த கை பலவீனமாக வும் செயற்பட்டால், இலகுவான பயிற்சிகளைச் செய்து எடைகுறைந்த கரலாக்கட்டைகளைப் பாவித்து படிப்படி யாகப் பலவீனமான கையைப் பலப்படுத்தி, இரு கைகளின் பலத்தையும் சீராக ஒருநிலைக்குக் கொண்டுவந்து, இரு கைகளும் ஒரே எடையுள்ள கரலாக்கட்டைகளைச் சுழற்று வதற்கு ஆற்றல் பெற்றபின் பயிற்சியைத் தொடரலாம்.

அதிக எடைகொண்ட கரலாக்கட்டையினால் முதன்முத லில் பயிற்சி செய்யக்கூடாது. எடை குறைந்த கரலாக் கட்டைகளினால், முதலில் சுழற்றும் முறைகளைப் பழகிக் கொண்டு, படிப்படியாக உடல் வலுவுக்குத் தகுந்த மாதிரி எடைகூடிய கரலாக்கட்டைகளைத் தொடர்ந்து பயிற்சிக்குப் பாவிக்கலாம். செய்முறைகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்கலாம். பயிற்சிக்கு நேரத்தையும் கூட்டலாம்.

**தொடர்ந்து இப்பயிற்சியைச் செய்து பயனடைய வேண்டுமானால்...!**

குருவின் வழிகாட்டல் இல்லாமல் தான்தோன்றித் தனமாக இப்பயிற்சியைச் செய்தால், கரலாக்கட்டைகள் உங்கள் மீது தாக்குவதைத் தவிர்க்கமுடியாது. இதனால், காயங்கள் ஏற்படலாம். எடுத்த உடனேயே பெரிய பயிற் சிகளைச் செய்யக்கூடாது. இலகுவான பயிற்சிகளைச் செய்து, அவற்றில் மனதை ஒருங்கினைக்க வேண்டும். முதலில் உங்கள் மனோநிலை முக்கியம். இலகுவான பயிற்சிகளைச் செய்து, மனதை ஒருநிலைப்படுத்தி மனோ



60 வயதில் கரலாக்கட்டை ஆசிரியர் பொ.மகாதேவா வுடன், அவருடைய மாணவன் சே.தேவராஜன் காணப் படுகிறார்.

நிலையை வெல்லவேண்டும். எடுத்த எடுப்பிலேயே பார மான கட்டைகளைப் பாவித்தால் - மணிக்கட்டு, முழங்கை மூட்டுக்கள், தோள்மூட்டுக்கள் போன்ற பாகங்களில் நோ, வலி ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. இந்த மூட்டுக்களில் உள்ள தசைநார்கள் சில சமயம் கிழிந்துவிடவும் கூடும். ஆகையால், பாரமான கரலாக்கட்டைகளைப் பயன்படுத்து தல், ஆரம்ப நிலையில் தவிர்க்கப்பட வேண்டியதொன்று.

இப்பயிற்சி செய்வதற்கு முன், நீட்டல் பயிற்சியை (STRETCHES) 15 நிமிடம் கரலாக்கட்டையினால் செய்த பின், சில தன்னிச்சைப் பயிற்சிகள் (FREE HAND EXER-CISE) செய்து கரலாக்கட்டைப் பயிற்சியைத் தொடங்குவது சாலச் சிறந்தது. இப்பயிற்சிகளை மேற்கூறிய அறிவுரைக ளைப் பின்பற்றிச் செய்தால், பல நன்மைகளை அடையலாம். குருவின் வழிகாட்டலின்றிச் செய்தால், பல தீமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். கரலாக்கட்டைப் பயிற்சிக்கு முன் - நீட்டல் பயிற்சி, உடலை உஷ்ணப்படுத்துதல் (WARM UP) போன்றவற்றைச் செய்யாமல், உடனடியாகவே கரலாக் கட்டைப் பயிற்சி செய்தால், அதிக விரையில் உங்கள் தசைநார்கள் கிழியவும், குத்து வேதனை ஏற்படவும், பயிற்சி யிலிருந்து விலகவும் ஏற் படும்.



தமிழர் பாரம்பரியமான கரலாக்கட்டை உடற்பயிற்சி நிகழ்வில் குருவணக்கம்.

இப்பயிற்சியைத் தொடர்ந்து செய்துவந்தால் - உங்கள் மனோ வலிமையும், உடல் வலிமையும் அதிகரிக்கும். இப் பயிற்சியினால் மூட்டுக்கள் இலகுவில் வளையக்கூடிய (FLEXIBILTY) ஒரு தன்மை யைப் பெறுவீர். அத்துடன், இப்பயிற்சியினால் இருதயம் பலமடையும், இரத்த ஓட்டமும் நன்கு நடைபெறும். முறை யான பயிற்சியைச் செய்வதி னால் உடலும், உள்ளமும், ஆரோக்கியமடைந்து, நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறுவீர் கள்.

தமிழ் மக்களின் பாரம்பரி யமான சிலம்பு சுழற்றுவதற்கு இப்பயிற்சி பெரிதும் உதவும். இப்பயிற்சி மணிக்கட்டுக்கள், தோள்மூட்டுக்களுக்கு நல்ல பலத்தைக் கொடுப்பதினால், நீண்டநேரம் சிலம்பு பயிற்சி செய்யலாம். சிலம்பு விளையாட்டில் வெற்றிகள் பல பெறு வதற்கு இப்பயிற்சி பெரிதும் உதவும். அதுமட்டுமல்ல, குத்துச் சண்டை, கராத்தே போன்ற விளையாட்டுக்களில் கைகளின் பலத்துக்கும், விரைவாகக் குத்துக்களைக் கொடுப்பதற்கும், தடுப்பதற்கும், குத்துக்களின் தாக்கம் கனதியாக இருப்பதற்கும், எதிரிகளை வீழ்த்துவதற்கும் இந்தக் கரலாக்கட்டைப் பயிற்சி கைகொடுக்கும். அது மட்டுமல்ல, இப்பயிற்சியைத் தொடர்ந்து செய்துவந்தால், மல்யுத்தப் போட்டிகளில் பூட்டுக்களை இறுக்க மாகப் பிடிப்பதற்கும், எதிரிகள் போடும் பூட்டுக்களை இலகு வாகக் கழற்றுவதற்கும் பெரிதும் துணைபுரியும். மல்யுத்தப் போட்டிகளில் வெற்றிவாய்ப்புகளைப் பெறலாம்.

இன்று தமிழர் பாரம்பரியமான கரலாக்கட்டை உடற் பயிற்சி புதிய மாற்றங்களுடன், பல புதிய வீச்சுகளுடன் அறிமுகப்ப டுத்தியிருக்கிறேன். இன்று எனது மாணாக்கன் தே.தேவராஜன் அவர்கள் கரலாக்கட்டை சுழற்றுவதில் முதல் மாணாக்கனாகத் திகழ்கின்றார். எல்லா வீச்சுகளையும் கற்றுத் தேறிவிட்டார். மிகவும் அழகாக, வேகமாகக் கரலாக்கட்டைகளை வீசுவார். மரபுவழி கரலாக்கட்டை உடற்பயிற்சி மீண்டும் புத்துயிர் பெற்று ஒளிவீசுவதற்கு என் பேரன்புக்குரிய மாணாக்கன் தே.தேவராஜன் அவர்களும் ஒரு காரணம். மாணாக்கர்கள் வரிசையிலே ஆ.ஆதரவன், க.சவூதி ஆகியோரும் முன்னனியில் திகழ்கின்றார்கள்.

தம்பி இரா.பஞ்சலிங்கம் அவர்களுடைய தந்தையார் இராசையா அண்ணர் அவர்களும், எனக்கொரு சோடிக் கரலாக்கட்டைகள் தந்து எனக்கு ஊக்கமூட்டியவர். அவ ரும் இக்கலையினில் ஈடுபாடு உள்ளவராய் இருந்தார். மேலும், இக்கலையின் வளர்ச்சிக்கு தம்பி இரா.பஞ்சலிங்கம், தம்பி பு.புலேந்திரன் அவர்களும் என்னுடன் சேர்ந்து சில விரிவு ரைகளும் செய்து, இக்கலை வளரப் பாடுபடுகிறார்கள்.

இன்று தமிழ் மக்களின் மரபுவழி விளையாட்டுக் கலை யான கரலாக்கட்டை மூலமாக, ஒரு திடகாத்திரமான உடல் நலத்துடன் கூடிய ஒரு மனிதனை உருவாக்கமுடியும். இன்று நவீன கருவிகள் மூலம் உடற்பயிற்சி சாதனங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும், கரலாக்கட்டை உடற் பயிற்சி மூலமாகவும், ஒரு திடகாத்திரமான மனிதனை உருவாக்கமுடியும்.

இன்று தமிழர் பாரம்பரியமான இம்மரபுவழி விளை யாட்டுக் கலை அழியும் நிலையில் இருக்கின்றது.

கரலாக்கட்டைப் பயிற்சி செய்வோரும் இல்லை. கரலாக் கட்டை எனறால் என்னவென்று அறியாதவர்களும் இருக்கி றார்கள். இப்பயிற்சியின் பலனை, நன்மையை, உடல் உறுதியைப்பேணும் பாங்கினைப் பற்றி பலர் அறியாதுள்ள னர். இக்கலையை அழியாமல் பாதுகாத்து, எமது சந்ததி யின் உடல்நலத்தைப் பேணிப்பாதுகாக்க குறிப்பாக இளை ஞர்கள் முன்வரவேண்டும். ஆர்வம் உள்ளவர்கள், ஆசிரி யர்கள், பெரியோர்கள், விளையாட்டுக் கழகங்கள் இக் கலைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவேண்டும், முன்வர வேண்டும். அதுமட்டுமல்ல, நீங்கள் எந்தத் துறைசார்ந்த விளையாட்டை எடுத்துக்கொண்டாலும், முதலில் உங்கள் உடல் வலுப்பெற வேண்டும். நீண்டநேரம் ஒரு பயிற்சியைத் தொடர்ந்து செய்வதற்கு அதிக சக்தி வேண்டும். ஆகையால், விளையாட்டுத்துறையில் ஈடுபடுபவர்கள் தங்கள் உடலை வலுப்பெற, அதிக சக்திபெற முயலவேண்டும். அந்த நோக்கத்தை எய்த, கரலாக்கட்டைப் பயிற்சி மிகப் பொருத்தமானது.

*- பொ.மகாதேவா.*

# உதைபந்தாட்டத்தில் சட்டங்களின் அவசியம்

**- எவ்.எக்ஸ்.சுதர்ஸன் -**

**1863** ஆம் ஆண்டுக்கு முன் றக்பி எனப்படும் ஆட்ட மும், நாம் இப்பொழுது விளையாடுகின்ற “சொக்கர்” (Soccar) அல்லது அசோசியேசன் புற்போல் (Association Football) எனப்படும் ஆட்டமும் ஒன்றுபட்டதாக இருந்த பொழுதும், ஒரு ஆட்டக்காரரை வேண்டும் என்று முரட்டுத்த னமாக முட்டிமோதும் ஒரு ஆட்டம் அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இதனால், பல சிறந்த விளையாட்டு வீரர்கள்கூட, அணியில் விளையாட முடியாத ஒரு இக்கட் டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் காரணமாக - உடனடியாகவே இது நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற ஒரு தேவை அனைவரிடமும் எழுந்தது. இதனடிப்படையில் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களினாலேயே, இன்று நாம் ஆடும் உதைபந்தாட்டம் 1963 இல் உருவாகியதனால்தான்- வீரர்களின் பாதுகாப்பும், மத்தியஸ்தர்களின் பாதுகாப்பும் சட்டங்கள் மூலம் பாதுகாக்கப்படுவதோடு, பார்வையாளர்

# உதைபந்தாட்டம் ஒரு விவரணம்

களும் சிறந்ததொரு போட்டியினைக் கண்டுகளிக்கக் கூடியதாக இருக்கிறது. இருந்தும் சில போட்டிகள் பார் வையாளர்களை வெறுப்படையச் செய்வதோடு, உதை பந்தாட்ட இரசனையையே இல்லாமல் செய்துள்ளது.



பெக்கன்பேர் - பீலே
உதைபந்தாட்டச் சக்கரவர்த்திகள்.

இதன் காரணமாக, சிலவேளைகளில் ஆட்டங்கள் தடைப்பட்டதும் உண்டு. இதேவேளை - நடுவர்களும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் நடை பெற்றிருக்கின்றன. இவை சட்டம் பற்றியதான பூரண அறிவில்லாமையால் ஏற்பட்ட ஒரு விளைவாகவே அனை வரும் கருதுகின்றனர். உதைபந்தாட்ட சட்டங்கள் பின்வரு மாறு பிரிக்கப்பட்டுள்ளன.

1. ஆட்டத்திற்கான தேவைகள்.
   உதாரணம்- ஆடுகளம், பந்து, ஆட்டக்காரர் அணிய வேண்டியவை.
2. ஆட்டத்தைக் கட்டுப்படுத்தல் (Match Control). இதில் நடுவர் (Referee), துணைநடுவர் (Lines man) ஆகியோர் பற்றிக் கூறப்பட்டிருக்கும்.
3. ஆட்ட விதிகள் (Law play).
   இதில் ஆடும் நேரம், தொடங்கும் முறை, பந்து உள்ளேயும் வெளியேயும், கோலெடுத்தல், தடை யிலா உதைகள் (Free kicks) தண்டனை உதை, உள்ளெறிதல், கோலுதை, மூலையுதை ஆகியவை இதில் அடங்கும்.
4. பிழைநிலையும் தவறான ஆட்டமும், பெருங்குற் றங்கள், சிறுகுற்றங்கள் என்பவற்றைக் குறிக்கும். இதேவேளை - ஆட்டம் பற்றியும், சட்டம் பற்றியும் அனைத்துலக உதைபந்தாட்ட சங்கம் (FIFA) பின் வருமாறு குறிப்பிடுகின்றது.

**பகுதி - 05**

“ஆட்டமானது விளையாட்டின் உயிர் நாடியான விளை யாட்டு மனப்பாங்குடன், ஆடப்படவேண்டியது மிக முக்கியம் எனவும், அனைத்துலகும் நெறிப்படுத்தி ஆட்டத்தை ஆடா விட்டால் சட்டத்திருத்தங்களால் பயனில்லை” என்றும் சங்கம் கூறுகிறது.

(தொடரும்)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# 2 ஆம் கட்டம், உச்சக்கட்டம்



சுசந்திகா - 'வெற்றிபெறுவதே பொழுதுபோக்கு.'

ASIAN GRAND PRIX இரண்டாம் கட்டம். இலங்கையில் நடைபெற்று முடிவடைந்துள்ளது. அது இலங்கைக் குழு வீர, வீராங்கனைகளுக்கு மிக மகிழ்ச்சியாக நடைபெற்று முடிந்துள்ளது. மொத்தம் வெற்றி கொள்ளப்பட வேண்டியிருந்த பதக்கங்களில் கணிசமான அளவாக 5 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலம் என்று 14 பதக்கங்களை இலங்கைக் குழுவினர் தட்டிச்சென்றது மிக மகிழ்ச்சிகரமாகத்தான் இருந்திருக்கமுடியும்.

இலங்கை தடகள வீர, வீராங்கனைகள் என்றால், முதலில் நினைவிற்கு வருபவர் சுசந்திகா ஜயசிங்கதான். ஹைதராபாத்தில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற சுசந்திகா, கொழும்பிலும் அதைவிட அட்டகாசமான பாணியில் 100 மீற்றரை வென்று சாதனை படைத்தார். இதற்காக இவர் எடுத்துக்கொண்ட நேரம் 11.53 செக்கன்கள். அடுத்து தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் இரண்டு நாடுகளிலும் நடைபெறவுள்ள நிகழ்வுகளில், சுசந்திகா தங்கம் வெல்வது அவ்வளவு கடினமானதாக இராது என்றே நம்பப்படுகிறது.

ஆசியப் போட்டிகளில் தங்கம் வென்ற தமயந்தி தர்ஷா ஹைதராபாத்தில் வெள்ளிப்பதக்கம் பெற்றநிலை ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருந்தாலும், அதனை அழகாகக் கொழும்பில் மேவினார் தமயந்தி தர்ஷா. தனக்கேயுரிய பாணியில் றொக்கட் வேகத்தில் 400 மீற்றர் தூரத்தை 52.74 செக்கன்களில் கடந்து சர்ச்சைக்கே இடமின்றி ஓடித் தங்கம் வென்றார். இதே வேளை, சுவேட்லானா (கசகஸ்தான்) இரண்டாம் இடமும், பிரியதர்சினி (இலங்கை) மூன்றாம் இடமும் பெற்றுக்கொண்டார்கள். தங்கம் வென்றதன்பின், தர்ஷா கருத்துக்கூறுகையில்- ஓகஸ்டில் பிரான்ஸில் நடைபெறவுள்ள வேர்ள்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளில் இதனைவிட, குறைந்த நேரத்தில் 400 மீற்றரை தாண்டுவதே தனது உடனடி இலக்கு என்று கூறுகின்றார்.

ஒருவகையில் சுகததாஸ உள்ளரங்கத்தின் பத்தாயிரம் ரசிகர்களையும் இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிகழ்வு எதுவென்றால், அது ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியாகத்தான் இருந்திருக்கும். ஏனெனில், ஹைதராபாத்தில் முதலில் இடம்பெற்ற றோகான் பிரதீப்குமார (46.31 செக்கன்) மற்றும் சுகத் திலகரட்ண (46.48 செக்கன்), அமரசேகர (46.81 செக்கன்) ஆகிய மூவரும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டனர். பிரதீப்குமாரவும் பிரான்ஸில் நடைபெறவுள்ள தடகளப்போட்டிகளை இலக்காகக்கொண்டே தனது அடுத்த நடவடிக்கைகளைத் தொடரப்போவதாகக் கூறுகின்றார்.

இரண்டாவது GRAND PRIX இல் ஏற்பட்டதொரு ஏமாற்றம் 100 மீற்றர் பெண்கள் தடைதாண்டல் போட்டியில் ஆகும். ஹைதராபாத்தில் நிச்சயம் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட சிறியாணி குலவன்ச வெள்ளிப்பதக்கமே பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால், இலங்கையில் நடைபெற்ற போட்டிகளில் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், தாய்லாந்தின் றொபட் டிரிஸ்ஸியா முதலிடம் பெற (13.42 செக்கன்), சிறியாணி இரண்டாம் இடமும் (13.59 செக்கன்), இந்தியாவின் சோமா பிஸ்வாஸ் (14.68 செக்கன்) மூன்றாம் இடமும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை -

110 மீற்றர் ஆண்கள் தடைதாண்டல் போட்டிகளில் ஹைதராபாத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்தககுமார மூன்றாம் இடமே பெற்றுக்கொள்ள முடிந்தது. முதலிடத்தை தாய்லாந்தின் நாரங்டைச்ஜன்ஜல் (14.35 செக்கன்) பெற்றுக் கொண்டார்.

இன்னொரு நிகழ்வான 3000 மீற்றர் தூர ஓட்டத்தில், முதல் மூன்று இடங்களையும் இலங்கையே பெற்றுக்கொண்டது. ஜயவீர, சந்திரதாஸ, மெண்டிஸ் மூவரும் பதக்கங்களைத் தட்டிச்சென்றனர்.

- நிர்மலன்.



தமயந்தி தர்ஷா - 'தாகம் தணியாது.'

# இப்படியே தொடரவிடலாமா?



திலீப் வெங்சர்கார் - "உண்மையைச் சொல்கிறேன்."

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் திலிப் வெங்சர்கார், சோஹெய்ப் அக்தாரின் பந்தைச் சேதமாக்கிய சம்பவம் பற்றிக் கடுமையாகவே கருத்து முன்வைக்கிறார். அதோடு இந்தச் சம்பவத்தின் தொடர்பாக, இரண்டு ஆட்டங்களில் விளையாடுவதில் அக்தாரைத் தடைசெய்த ஆட்ட மத்தியஸ்தர் விஸ்வநாத்தின் நடவடிக்கையையும் பாராட்டியுள்ளனர். இப்படியான ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், கிரிக்கெட் ஆட்டம் சீரழிந்துவிடும் என்றும் எச்சரிக்கிறார் வெங்சர்கார்.

இதனைத் தொடர்ந்து வெங்சர்கார் முன்வைக்கும் சில கருத்துக்கள் சிந்தனைக்குரியன. மேற்கிந்திய- அவுஸ்திரேலிய நான்காவது டெஸ்டில் தோல்வியை எதிர்கொண்ட நிலையில், அதனைச் சகித்துக்கொள்ள இயலாத நிலையில் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் கிறென் மக்ரா, ராம்நரேஷ் சர்வானுடன் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதை அத்தனைபேருமே கடுமையாகக் கண்டித்தார்கள். இந்த ஆட்டத்தில் ஆட்ட மத்தியஸ்தராகக் கடமையாற்றியவர் மைக் புரொக்டர். உலகெல்லாம் மக்ராவை அசிங்கமாகப் பார்த்தவேளையில் - புரொக்டரின் கண்ணுக்கு மட்டும் அந்தச் சம்பவம் பெரிதாகத் தெரியவில்லை. இதனைத்தான் வெங்சர்கார் சாடுகின்றார். இதனைத் தொடர்ந்து, இவர் காத்திரமானதொரு கோள்வியைக் கேட்கிறார். அதாவது, ஆட்ட மத்தியஸ்தர் பிழைவிடும்போது அல்லது பாரபட்சமாக நடந்துகொள்ளும்போது, அந்த மத்தியஸ்தரைத் தண்டிக்க அல்லது நீக்க ICC சட்டக்கோவையில் இடமில்லையா என்று கேட்கிறார்.

தனது ஆதங்கத்தை மேலும் வெளிப்படுத்தும் அவர், புரொக்டர் என்பவர் என்ன சட்டத்துக்கு மேலானவரா என்று கேட்கிறார். இது தொடர்பில் ICC விளக்கம் தர வேண்டும் என்பவர், ஐரோப்பிய மத்தியஸ்தர்கள் உபகண்ட வீரர்கள் விடயத்திலும் பல தடவைகள் பாரபட்சமாக நடந்துகொண்டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றார். பொதுவாக - கடந்தகாலங்களில் வெள்ளைத் தரப்பு மத்தியஸ்தர்கள் அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளின் அத்துமீறல்களைக் கண்டுகொள்வதில்லை என்றும், அதேவேளை உபகண்ட வீரர்களை "கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்" என்ற மனப்பாங்கில் நடத்தி வந்ததையும் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகிறார்.

இன்னொரு புறம், இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் ஆட்டத்தொடர் ஒன்றில் மத்தியஸ்தராகக் கடமையாற்றிய இந்தியரான ஹனுமண்ட்சிங் துணிந்து இங்கிலாந்து வீரர்களின் அத்துமீறல்களைக் கண்டித்ததையும், இதனைச் சகித்துக் கொள்ளமுடியாத இங்கிலாந்துப் பத்திரிகைகள் 'ஒப்பாரி வைத்ததையும்' சுட்டிக்காட்டுகின்றார். இந்த வெள்ளைப் பிரபுத்துவ மனப்பாங்கு மாற்றப்பட வேணடும் என்பது ஒருபுறமிருக்க, மத்தியஸ்தர்களைத் தரப்படுத்தலுக்கு உட்படுத்தி வைத்திருப்பதுபோல, ஆட்ட மத்தியஸ்தர் களையும் தரப்படுத்த வேண்டும் என்கின்றார். தரப்படுத்தி தகுதியற்றோரை நீக்கவேண்டும். சிறந்தவர்களை இனங்காணவேண்டும் என்கிறார்.

ஒன்றைக் கூறலாம். வெள்ளை மிதப்பை இல்லாது ஒழிப்பதாயின், ஏனைய கிரிக்கெட் விளையாடும் நாடுகள் தமக்குள் ஒன்றுபட வேண்டும். இந்த ஒன்றுபடல் மூலம் மட்டுமே எமது தகுதியை, தரத்தை நாம் உயர்த்திக் கொள்ளமுடியும். அதுமட்டுமன்றி, தற்போதைக்காவது ஆசியாவில் பலமான கிரிக்கெட் அமைப்பொன்றை உருவாக்கவேண்டும். இதுவொரு ஆரம்பமாக இருக்கலாம். நீண்ட காலப்போக்கில் மேலும் நாடுகளை இந்த அமைப்பில் இணைத்துக் கொள்ளலாம். இதன்மூலம் பல்துறைச் செயற்பாடுகளை விருத்திசெய்து கொள்ளமுடியும். இல்லாவிட்டால், இன்னும் பல மக்ராக்கள், வீமன்கள், புரொக்டர்கள் அத்துமீறிக்கொண்டே இருப்பார்கள்.



சர்வான், மக்ரா - தெருச் சண்டை மேலானது

இது தொடர்பில் பத்திரிகையொன்றில் வந்த கேள்வி-பதில் மனதில் பதிந்தது.

*கேள்வி* :- அவுஸ்திரேலிய வீரர்கள் அடிக்கடி கோபம் கொண்டு தகராறில் இறங்குவதற்கு, மேட்டுக்குடி மனோபாவம் காரணம் என்கிறீர்களே அது என்ன?

*பதில்* :- மெக்கிராத்தோ, ஸ்ரீவ் வோவோ, மக்மிலனோ, ஆத்தர்டனோ விரல்நீட்டி, வசைசொல்லி எச்சரித்தால், அது விளையாட்டுக் கொந்தளிப்பில் உணர்ச்சிவசப்பட்டதாகக் கருதப்படும். அர்ஜுனவோ, சகீர்கானோ, ஆர்ல்டோ, யொஹானாவோ அப்படி நடந்தால், அவர்கள் இன்னமும் நாகரிகமடையாதவர்கள் என்று கருதப்படும்.

ஜோஸப் கிருஷ்ணா.

# ஹோல்டிங் GENTLEMAN

முறையற்ற பந்துவீச்சு என்பது கிரிக்கெட் உலகில் பரவலாக விவாதிக்கப்படுவது. முறையற்ற பந்துவீச்சு என்று சுட்டிக்காட்டப்படுவது பல பரிமாணங்களில் நோக்கப்படுகின்றது. ஒன்று மிகத் திறமையைத் தன்னகத்தே கொண்டுள்ள பந்து வீச்சாளர் இடையிடையே அறிந்தோ, அறியாமலோ முறையற்ற பந்து வீசுவதைத் தடுத்து, திருத்தி - சரியானதொரு பந்து வீச்சாளராக மாற உதவி செய்வது. இன்னொன்று, சில பிராந்தியங்களில் உள்ளவர்கள் மட்டுமே திறமைசாலிகள். ஏனைய பிராந்தியங்களில் திறமைசாலிகள் தோன்றமுடியாது. அப்படித் தோன்றினாலும், அது முறைதவறிய முறையில் ஏற்படுவது என்ற எடுகோள் அடிப்படையில் உண்டானது. இன்னொன்று, திட்டமிட்டே சிறந்த பந்துவீச்சாளர்களை மட்டந்தட்டிக் குறைகூறி, அவர்களைக் கிரிக்கெட் உலகில் மறைய வைப்பது.

தற்போதைய பந்துவீச்சாளர்களில் - முத்தையா முரளிதரன், சோஹைய்ப் அக்தார், பிரெட்லீ போன்றவர்கள் இக்குற்றச்சாடடுக்கு ஆளானவர்கள். இதில் முரளிதரன் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர். அக்தார், பிரெட்லீ போன்றவர்களது பந்துவீச்சில் காணப்பட்ட சில குறைகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின், ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்.



மைக்கல் ஹோல்டிங் - நல்ல வைத்தியர்

இந்த ரீதியில் முறையற்ற பந்துவீச்சாளர் என்று தற்போது குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர் மேற்கிந்திய அணியின் இளம் வேகப் பந்துவீச்சாளர் ஜேர்மைனன் லோசன் ஆவார். இந்த சர்ச்சை வெளியில் தெரியவந்தது அவுஸ்திரேலியாவிற்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் இவரின் பந்துவீச்சில் 7/78 என்றவாறு அவுஸ்திரேலியா சரிந்தபோதுதான். ஆனால், மேற்கிந்தியாவின் புகழ்வாய்ந்த வேகப்பந்து வீச்சாளரும், ICC இன் தற்போதைய பந்துவீச்சு மறுசீரமைப்புக் குழுவின் ஒருவருமான மைக்கல் ஹோலடிங் இதற்கு முன்னமே ஜேர்மன் லோசனின் பந்துவீச்சில் சிறியதொரு நுட்பக் குறைபாடு இருக்கிறது. இது தீர்க்கப்படவேண்டியது என்று ஆலோசனை கூறியிருந்தார்.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனறால், இருவருமே ஜமெய்க்கா நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆனால், ஹோல்டிங் - தீவுப் பற்றைக்கூட தூக்கியெறிந்து குறையைச் சுட்டிக் காட்டியிருந்தார். இது நல்நோக்குடன் செய்யப்பட்டதொரு காவியம். ஆனால், இதற்கு முன்பதாக லோசனின் ஐந்து டெஸ்ட்களில் மத்தியஸ் தம்வகித்த ஷெப்பட் அவர்களுக்கு- இந்த டெஸ்டில்தான், லோசனின் குறைபாடு கண்ணுக்குத் தெரிந்ததென்றால், இதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதுபோல தெரியவில்லையா? மேலும், ஹோல்டிங் கருத்துக்கூறும்போது, இன்னும் பலர் - குறிப்பாக 6 பேர் முறைதவறிய பந்துவீச்சு என்ற வரையறைக்குள் வரவேணடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கண்டு கொள்ளப்படுவதில்லை என்றும் குறிப்பிடுகிறார்.



ஜேர்மைன் லோசன் - திறமைக்குப் பரிசு அவமானமா?

மைக்கல் ஹோல்டிங் தன்னாட்டு இளைஞன் திருந்த வேண்டும் என்று, நன்நோக்கில் உண்மை பேசினார். இதனைச் சுட்டிக்காட்டும் விமர்சகர்கள் அவசரப்பட்டு உண்மையறியாது, தாங்களே சரியென்று நிற்பவர்கள் தம்நாட்டு இளைஞர்களுக்கே தீங்கிழைக்கிறார்கள் என்றும், ஹோல்டிங் போன்றவர்கள் தம்நாட்டு இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக அமைகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

- மக்டலீன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

*சிந்தனைக்கு*

மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல்.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## பொறுப்பற்ற போக்கு !

இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிப்பதோடு - அதனூடாக அமைதிச் சூழலையும் உறுதிப்படுத்தவேண்டிய முக்கிய கடமையைக் கொண்டிருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் நடந்துகொண்ட முறைமை தமிழ்மக்களிடையே விசனத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மாணவரமைப்பின் முன்னாள் பொறுப்பாளர் மேஜர் முரளியின் நினைவாக, உரும்பிராய் - சாவகச்சேரி வீதியில் பல வருடங்களுக்கு முன்னரே கட்டப்பட்டிருந்த நினைவுத் தூபியை - மக்களும், மாணவர்களுமாக புனரமைத்துக் கொண்டிருந்தபோது - அங்கு வந்த இராணுவத்தினர் - அங்கிருப்பது மறைந்த போராளி ஒருவரது நினைவிடம் என்ற கௌரவத்தைக்கூடத் தராது, மிகக் கேவலமான முறையில் அடாவடித்தனம் புரிந்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் - அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு மாவீரனின் நினைவிடத்தை புனருத்தாரணம் செய்த மக்கள் மீது அச்சுறுத்தலையும், மிரட்டலையும் விடுத்த படையினர் -

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் நடந்து கொண்டிருந்தனர்.

நினைவுத் தூபியைப் புனரமைப்பது என்பது - மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் ஒரு செயலென்பதுடன், இதில் - கிஞ்சித்தும் இராணுவ நோக்கம் கலந்திருக்கவில்லை என்பதை அங்கு கூடியிருந்த மக்களும், மாணவர்களும், போராளிகளும் எடுத்துக்கூறியும் -

கொடிக்கம்பத்தை ஏறிமிதித்தும், மின்விளக்குகளைப் பிடுங்கி எறிந்தும் அட்டகாசம் புரிந்திருக்கின்றனர் படையினர்.

இந்த நடவடிக்கை - போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் செயலென்பதைக் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தி, நியாயபூர்வமான பதிலொன்றைப் பெறுவதற்கு - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை - விடுதலைப் புலிகளும், மக்களும் அணுகியபோது -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரியான ஒலே புரூண்டம் - தனது கடமையை உதாசீனப்படுத்தியவராயும், புகாரிட வந்தவர்களை அலட்சியப்படுத்துபவராகவும் நடந்துகொண்டிருக்கிறார்.

படையினர் நடந்துகொண்டது - அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்பதோடு, மக்களை அச்சுறுத்திக் குழப்ப நிலையையும் உருவாக்க முயற்சித்ததை விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டிய போதும் - சீரான நிலையில் இல்லாதவராகப் பதிலளித்திருக்கிறார் புரூண்டம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் என்போர் - எவ்வேளையிலும் இலகுவாகத் தொடர்புகொள்ளக்கூடிய நிலையிலிருக்க வேண்டியவர்கள் என்னும்போது -

காவலாளி மட்டுமே தங்கியிருந்த அலுவலகமும், சீரான நிலையிலில்லாத பொறுப்பதிகாரியும், புகாருக்கு மதிப்பளிக்காத அவரது மனோபாவமும் - கண்காணிப்புக் குழுவுக்குரிய தகுதியை, உயர் கௌரவத்தைச் சிதைப்பதாகவே அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்தன்மையிலும், நியாயபூர்வமான நடவடிக்கைகளிலும், நேர்மையான அணுகுமுறையிலும் தமிழ்மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றபோது - மாவட்ட நிலைப் பொறுப்பிலிருக்கும் ஒரு தனி அதிகாரியின் இவ்வாறான நடத்தை, முழுக் கண்காணிப்புக் குழுவிற்கும் இழுக்கைச் சேர்ப்பதாகவே கருதப்படமுடியும்.

தனியே ஒலே புரூண்டம் என்ற தனியராக அல்லாது - மிகப்பெரும் பொறுப்பைச் சுமந்தவராகக் கடமையேற்று நிற்கும் அவரிடம் - இத்தகைய அசமந்தத்தையும், அலட்சியத்தையும் மக்கள் எதிர்பார்த்து நிற்கவில்லை.

புரூண்டம் நடந்துகொண்ட முறைமை, நினைவுத் தூபியருகே அடாவடித்தனம் புரிந்த படையினரின் நிலைக்கு ஒப்பானதாகத் தரமிறங்கி நிற்பதையே, மக்கள் வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையிலுள்ளனர்.

எனவே - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, தனது நம்பகத்தன்மையையும், நடுநிலைமையையும், இலகுவில் அணுகக்கூடிய எளிமையையும் உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதே மக்கள் கருத்தாகும்.

மேஜர் முரளி நினைவுத்தூபியருகே நடந்த சம்பவம் - கண்காணிப்புக்குழுவின் அலட்சியத்தால் எல்லை மீறியிருக்குமாயின், அது அமைதிச் சூழலைப் பாதிக்கின்றதாக விஸ்வரூபம் எடுத்திருக்குமாயின் - பொறுப்புவாய்ந்த ஒரு அதிகாரியின் அலட்சியமே இதற்கெல்லாம் காரணமாயிருக்கும்.

எனவே - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - இந்த விடயத்தைத் தீவிரமாகக் கவனத்திலெடுத்து - கண்காணிப்புக்குழுவின் பொறுப்பதிகாரியின் நடத்தையை மீளாய்வு செய்வதோடு, படையினரின் முறைதவறிய நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி, தனது பொறுப்பை எதிர்காலத்தில் உறுதிப்படுத்த வேண்டும். அதுவே, மக்கள் எதிர்பார்ப்பாகும்.

# சமாதானம் ஏற்பட்டுள்ள திருப்தியுடன் நாம் விடைபெற்றுச் செல்கின்றோம்!

## எம்.எஸ்.எவ்.மருத்துவர் பிரியாவிடைநிகழ்வில் உரை

(பருத்தித்துறை)

இலங்கையில் அல்லற்பட்ட மக்களுக்கு எம்மால் இயன்ற மருத்துவ சேவைகளை வழங்கிவந்திருக்கிறோம். இன, மத, அரசியல்பேதமின்றி போராபத்துக்கள் ஏற்படும் மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதே எம்.எஸ்.எவ். மருத்துவர்களின் நோக்கமாகும்.

- இவ்வாறு, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் வைத்திய சேவைகளை முடித்துக் கொண்டு செல்லும் எம்.எஸ். எவ். குழுவினருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் உரையாற்றிய இலங்கைக்கான எம்.எஸ்.எவ். வைத்திய சேவைக்குழு இணைப்பாளர் டாக்டர் வைவ் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திசாலை, மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் டாக்டர் வைவ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

இலங்கையில் அல்லற்பட்ட மக்களுக்கு எம்மால் இயன்ற மருத்துவ சேவைகளை வழங்கி, சமாதான சூழல் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் நாங்கள் உங்களிடமிருந்து விடைபெற்றுச் செல்கிறோம்.

இம் மக்கள் சமாதான சூழலில் நல்ல வாழ்க்கை வாழ வேண்டுமென, நாம் விரும்புகின்றோம். எனினும், துரதிர்ஷ்ட வசமாக நிலைமை மாற்றமடைந்து, மக்கள் அவலங்களை அனுபவிக்க நேர்ந்தால் மக்களுக்குச் சேவையாற்ற எம்.எஸ். எவ். வைத்தியக் குழு வந்துசேருமென உங்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறேன்.

கடந்த 16 வருடங்களாக இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி அவலங்களை அனுபவித்து வந்த இம் மக்களுக்கு உரிய வைத்திய சேவைகளை வழங்கி வந்தோம். எமது வைத்தியக் குழுவில் உலக நாடுகளைச் சேர்ந்த பல வைத்தியர்கள் இணைந்துள்ளனர்.

எமது வைத்தியக் குழு, சேவையை முடித்துக்கொண்டு செல்கிறதென்றால் அது ஒரு நல்ல செய்தி என்பதே அறிகுறியாகும். அதாவது - அல்லற்பட்ட மக்கள் அதிலிருந்து நீங்கி சமாதான வாழ்வு வாழப்போகிறார்கள் என்பதே கருத்தாகும்.

சமாதானம் ஏற்பட்டுவரும் இவ்வேளையில், எம்.எஸ்.எவ். குழுவினருக்கு இப்பகுதியில் எதுவிதப் பணியும் இருக்க மாட்டாது. பேராபத்து இல்லாத இடங்களில் எமது பணிகள் இடம்பெறமாட்டாது. நடைமுறை சமாதானத்தை எதிர்பார்த்து எம்.எஸ்.எவ். வைத்தியசேவை அடுத்த மாதத்துடன் மட்டக்களப்பிலும் முடிவுக்குக்கொண்டுவரப்படும்.

எமது குழுவினர், வைத்திய சேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவிய எமது வைத்திய சேவைக்குழு அங்கத்தவர்கள், எம்முடன் இணைந்து செயற்பட்ட இலங்கையர்கள், எம்முடன் ஒத்துழைத்த பொதுமக்கள் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், எம்.எஸ்.எவ். வைத்திய சேவைக் குழுவின் பருத்தித்துறை இணைப்பாளர் செல்வி.சிகோலின் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது -

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது பெரிய வைத்தியசாலை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை ஆகும். இவ் வைத்தியசாலையில் வைத்தியப் பணிகளை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தமை மிக மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பகுதி மிக வரவேற்கத்தக்க அழகான இடமாகும். இப்பகுதி நோயாளர்களுக்குத் தொடர்ந்து சேவைகள் வழங்கப்பட வேண்டும், இதில் வைத்திய சேவைகளை வழங்குவோர் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

எம்.எஸ்.எவ். மருத்துவசேவைக் குழுவினர் இலங்கையில் மேற்கொண்ட வைத்தியசேவைப் பணிகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், எம்.எஸ்.எவ். குழுவினர் நோயாளர்களுடன் மிக அன்பாகவும், பண்பாகவும் உறவாடி சிரித்த முகத்துடன் சிறந்த வைத்திய சேவைகளை வழங்கியுள்ளார்கள் என்ற முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். வைத்தியர்களின் உண்மையான சேவையும் அதுவே ஆகும்.

எம்.எஸ்.எவ். வைத்தியக் குழுவில் எல்லா நாடுகளிலிருந்தும் வைத்தியர்கள் இணைந்து பணியாற்றியுள்ளார்கள். ஒவ்வொரு வைத்தியர்களும் ஒவ்வொரு மாதிரியான குணாதிசயங்களைக் கொண்டவர்கள் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களும் அப்படியே. அவர்களை எல்லாம் எமக்கேற்றவாறு மாற்றி, வைத்தியசேவைகளை வழங்கினோம்.

சந்தர்ப்பம், சூழலுக்கு ஏற்றவாறு எம்மை மாற்றி மக்களுக்குச் சேவையை வழங்கினோம். நோயாளருக்குச் சேவையாற்றுவதே எமது எதிர்பார்ப்பு. எமது இலக்கை அடைய நாம் பணிசெய்துள்ளோம். இப்போது உங்களிடமிருந்து விடைபெறுகின்றோம் என்றார்.

பதில் மாகாண சுகாதார பணிப்பாளர் தா.சிவபாதம், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்.

(17)

# ஸ்ரீமாபுரவில் சிங்களவரிடமிருந்து துப்பாக்கிகளும், ரவைகளும் மீட்பு!

## இராணுவமும் பொலிஸாரும் திடீர் சுற்றிவளைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - ஸ்ரீமாபுரப் பகுதியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் திடீரென சுற்றிவளைத்து நடாத்திய தேடுதலின்போது, 35 சிங்கள மக்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து ஐந்து துப்பாக்கிகளும், ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது -

கடந்தவாரம் திருகோணமலை - மடத்தடிப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர் ஞா.கிருபைராசா இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக - விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், தமக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து, கடந்த செவ்வாயன்று திருகோணமலை நகரை அண்டிய பகுதியிலுள்ள, சமுத்திரகமவை சுற்றிவளைத்து நடாத்திய தேடுதலின்போது, 135 சிங்களமக்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர், விசாரணைகளை மேற்கொண்டு, படிப்படியாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் ஸ்ரீமாபுர பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரும், பொலிஸாரும் வீடுவீடாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஸ்ரீமாபுர கிராமத்துக்கான நுழைவாயிலிலுள்ள மதகு ஒன்றிலிருந்து சக்திவாய்ந்த இரு குண்டுகள் மீட்கப்பட்டு, இராணுவகுண்டு செயலிழக்கும் பிரிவினரால் பாதுகாப்பாக வெடிக்கவைக்கப்பட்டது.

இந்த கிராமத்தைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய வேளை, ஐந்து துப்பாக்கிகளும், துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர். (10)

# யாழ்.அகதிமுகாம்களிலுள்ள சிறுவர்கள் எதியோப்பியாவைவிட மோசமான நிலையில்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 15 மாதங்களில், யாழ்ப்பாணத்தில் - சிறியளவிலான அபிவிருத்தித் திட்டம்கூட மேற்கொள்ளப்படவில்லை என்று - தனது யாழ்பபாண விஜயத்தை முடித்துத்திரும்பிய காணியமைச்சர் ராஜித சேனாரத்ன - பிரதமர் மற்றும் அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார்.

தனது யாழ். விஜயம் குறித்து விளக்கமளித்தபோதே -



அவர் இவ்வாறு குறிப பிட்டதாகத் தெரிய வருகிறது.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மிகக் கொடுமையான சுகாதார நிலையில் வாழ்கின்றார்கள். எதியோப்பியாவைவிட மோசமான நிலையில் யாழ்ப்பாண மக்கள் உள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கக்கூடாது என்று, தென்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்துவதிலோ, விவாதம் நடத்துவதிலோ பயன் இல்லை.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில்வாழும் சிறுவர்கள், எதியோப்பியாவைவிட மோசமான நிலையில் வாழ்கின்றனர்.

கழிவுநீர் வாய்க்கால் பகுதிகளில்கூட மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். மக்கள் வாழ்கின்ற சூழலும், வேலையில்லாப் பின்னணியும்தான் அவர்களைப் புலிகளுடன் இணைந்துகொள்ளச் செய்துள்ளது.

எவ்வாறு தென்னிலங்கை மக்கள் முன்னர் ஜே.வி.பியுடன் இணைந்தார்களோ, அவ்வாறே புலிகளுடன் தமிழ் மக்கள் சேர்கின்றனர்.

வடபகுதி மக்கள் கொதிநிலையில் வாழ்ந்து கொண்டிருக்க, தெற்கில் அரசியல்வாதிகள் குளிரூட்டிய அறையில் இருந்துகொண்டு, உயர் பாதுகாப்பு வலயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றன.

மிகவும் மோசமான, சுகாதாரச் சீர்கேடுள்ள குளத்தில் அங்குள்ள மக்கள் குளிக்க வேண்டியுள்ளனர். இவ்வாறு குளிக்கும் மக்களை என்னாலும் காணமுடிந்தது. வைத்தியசாலைக் கழிவுகள்கூட இந்தக் குளத்தில்தான் கலப்பதையும் அவதானிக்க முடிந்தது.

வடக்குக்குச் செல்லும் அரசியல்வாதிகள், சிறிய கிராமங்களுக்குச் செல்வதில்லை. இதனால், மக்களின் பிரச்சினைகளை அவர்கள் அவதானிக்க முடியாது போய்விடுகிறது என்று - அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் குறிப்பிட்டார்.

இதைக்கேட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் அதிர்ச்சியடைந்ததாகத் தெரியவருகிறது.(01)

## தெற்குத் திசையினிலே.....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

# உண்மைகளைப் புரிந்துகொண்டபோதும் செயற்படுத்த முடியாதுள்ள சிங்களத் தலைமை



சந்திரிகா

முன்னர் - ஜப்பானின் தலைநகர் எதுவெனக் கேட்டால், ரோக்கியோ எனச் சொல்லிவிட்டு பேசாமல் இருப்போம். ஆனால், இப்போது இலங்கையர்களைப் பொறுத்தவரையில், 80 வீதமானோர் ரோக்கியோவைப் பற்றியே பேசுகிறார்கள். கொழும்பு என்ற வார்த்தை உபயோகத்தைப்போல, ரோக்கியோ என்ற வார்த்தை உபயோகமும் மாறிவிட்டது.

முன்னர் - பிரித்தானியர்கள் எம்மை ஆட்சி செய்ததன் தாக்கம், இன்னமும் எமது மத்தியில் இருந்துகொண்டே இருக்கிறது. அவர்கள் விட்டுச்சென்ற ஆட்சிமுறையிலிருந்து நாம இன்னமும் மீளமுடியாமல் இருக்கின்றோம். அவர்கள் விட்டுச்சென்ற வார்த்தைப் பிரயோகங்களைத் தொடர்ந்தும் நாம் உச்சரித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறான நிலைமை ஒன்றுதான் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், நோர்வே எனப்பல நாடுகள் இலங்கையில் தமது செல்வாக்கைச் செலுத்துகின்றன. நோர்வேயைப் பொறுத்தவரையில், தாமாகவே இலங்கையில் உதவிப் பணிகளைச் செய்த போதும் - பின்னர், அரசாங்கமே அந்த நாட்டை உதவிக்கு அழைத்துக்கொணடது. எங்கள் நாட்டுக்குள் பிரச்சினை இருக்கிறது, அதனைத் தீர்ப்பதற்கு நீங்கள்தான் அதிக பங்களிப்பை வகிக்க முடியும், உங்களுக்கு அந்த அனுபவம் இருக்கிறது, எனவே - நீங்கள் எங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவிசெய்யுங்கள் என, அரசாங்மே அவர்களை அழைத்தது.

ஆனால், மறுபுறத்தில் - மேலும் சில நாடுகளை அரசாங்கம் இணைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை அண்டைநாடு, இந்திய வம்சாவளித் தொடர்புகள் இருக்கின்றன, வரலாறு மிக நெருக்கமாக இருக்கிறது. எனவே, இவர்களை நிராகரிக்க முடியாது.

மறுபுறத்தில் - இலங்கையில் தமிழர் தாயகப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டத்தில் இந்தியாவே தளமாக விளங்கியது. அதேபோல, இன்றும் அங்கு இலங்கை அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இலங்கை - இந்தியாவை அரவணைத்தே செல்லவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

என்றாலும் - அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா போன்ற நாடுகள் எம்மில் அக்கறை கொண்டு செயற்படவில்லை. அந்த நாடுகள் தமது லாபத்தை முதன்நிலைப்படுத்தி இலங்கையுடன் ஒத்துழைப்பை நல்க விரும்பின. சந்தர்ப்ப சூழ்நிலையால், இலங்கை உள்நாட்டுப்போர் ஒன்றில் சிக்கித் தவித்தபோது, இந்த நாடுகளின் உதவிகளை உதறித்தள்ள முடியவில்லை. வெறுப்போடுதானும் இந்த நாடுகளின் உதவிகளை மனமுவந்து ஏற்றுக் கொளளும் நிலைக்கு இலங்கை ஆட்பட்டது. அதன் தாக்கம் இன்று உச்சநிலையை அடைந்துவிட்டது.

அமெரிக்காவை, உலகின் பொலிஸ்காரனாக மூன்றாம் உலக நாடுகள் அல்லது ஏனைய வளர்முகநாடுகள் கணிப்பதைப் போலவே, இலங்கையர்கள் - குறிப்பாக, தென்னிலங்கை சிங்கள மக்களும் கணிக்கின்றனர். ஆனால், அந்தக் கணிப்பையும் மீறி - அந்த நாட்டின் உதவியைப் பெறவேண்டிய அவசியம் இலங்கையின் தென்பகுதிக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு பிரதான காரணம், தமது நாட்டுக்குள் அன்று முதல் வாழ்ந்துவரும் தமிழ்மக்களை இந்தச் சிங்கள மக்கள் அங்கீகரிக்காமையே ஆகும். சிங்கள மக்களால் அங்கீகரிக்கப்படாத தமிழ்மக்கள், இறுதிக்கட்டமாக ஆயுதம்தாங்கிப் போராடிய வேளையில், அவர்களின் போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத சிங்கள மக்களின் தலைமைகள், ஆயுத உதவிகளுக்காக அமெரிக்காவை நாடின.

அதுமட்டுமல்லாமல், போர் ஒன்றினால் தவித்துப்போயுள்ள இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புமுகமாகவும், நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவும், ஒருகட்டத்தில் போரை முன்கொண்டு செல்வதற்கு வேண்டிய நிதி உதவிக்காகவும், தென்னிலங்கை அல்லது மத்திய அரசியல்வாதிகள் அமெரிக்கா, ஜப்பான் உட்பட்ட பல நாடுகளுடன் தாமே தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டனர்.

வலிந்துபோய் உதவி கேட்டுப் பெற்றுக்கொண்டதன் காரணமாகவே, குறிப்பாக - நாடுகளின் தூதுவர்கள் கூட இலங்கையின் அரசியலை - அரசியல்வாதிகளை விமர்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவை யாவும் இலங்கையர்களாகவே தேடிப பெற்றுக் கொண்டவை. இலங்கைக்கு உதவிசெய்த, அல்லது செய்கின்ற நாடுகள், மனிதாபிமான ரீதியில் செயற்பட்டிருக்குமானால், அந்த நாடுகளைப் போற்றிப் புகழமுடியும். ஆனால், இலங்கையில் நடப்பதுவோ எதிர்மறையான செயல்கள். எந்த நாடுகள் உதவிக்கு அழைக்கப்பட்டனவோ, அந்நாடுகளே இலங்கையைச் சுரண்டும் செயல்களைச் செய்கின்றன. சுரண்டல் - முன்னர் இருந்த வடிவத்தை மாற்றி, தற்சமயம் நவீன சுரண்டல் முறையாக மாற்றம் பெற்றிருக்கிறது.



ஜோன் அமரதுங்க

தமது நாட்டு முதலீடுகளை இலங்கையில் மேற்கொண்டு, இலங்கையருக்கு குறைந்த சம்பளங்களைக் கொடுத்து, அதன்மூலம் கூடிய இலாபத்தை உழைக்கும் உத்தியையே இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் மேற்கொண்டுள்ளன. இதனால், இலங்கையின் இறைமை முழுமையாகச் சேதமடைந்துவிட்டது. இந்த நிலையில், தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் என்ற நிலைப்பாட்டில் மட்டுமே, இலங்கையின் இறைமையை பற்றி தென்னிலங்கை அரசியல்வாதிகள் பேசுகின்றனர்.

இதுவரை, 'வரலாறும் அதனை ஒட்டிய இன்றைய நிலைப்பாடும்' என்ற அம்சத்தை குறுந்தூர இலக்கில் பார்த்தோம்.

இனி, இன்றைய அரசியல் நிலைப்பாட்டை உணர்த்தி "ரோக்கியோ" பற்றி பார்ப்போம்.

நலிந்துபோயுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப, சுமார் 33 நாடுகளின் பிரதிநிதிகள் பணஉதவி செய்வதற்காக ரோக்கியோவில் ஒன்றுகூடுகின்றனர்.

இவர்கள் தரப்போகும் பணத்தைக் கொண்டே போரினால் அழிவுக்குள்ளான வடக்கு - கிழக்குப் பகுதிகளை மீளமைக்கப்போவதாக, இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியினர் கூறுகின்றனர். இதனை மையமாகக்கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளையும் ரோக்கியோ மாநாட்டில் பங்குகொள்ளச்செய்ய எடுத்த முயற்சிகள் யாவுமே செயலிழந்து போயுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, தமிழ்மக்களின் உரிமைகளைக் கொடுக்காத வரையிலுமே சிங்கள மக்கள் இலங்கையில் முதனிலை மக்களாக இருப்பர். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த அடுத்த கணமே, தமது முதனிலை இடம் இல்லாமற்போய்விடும் என்ற நிலைப்பாடே சிங்கள மக்கள் மற்றும் கடும்போக்கு சிங்களத் தலைமைகளிடம் இருந்து வந்தது. எனினும், தற்சமயம் அந்த நிலைமையில் மாறறம் ஏற்பட்டுள்ளது. எனவே, அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் சிங்களத் தலைமைகளிடம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அதனைச் செயற்படுத்துவதில்தான் சிங்களத் தலைமைகள் பின்னிற்கின்றன.

இதனடிப்படையில்தான், ரோக்கியோ மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பங்குகொள்ளச் செய்வதில் அவர்கள் தோல்வி கண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கேற்பு இல்லாமல், ரோக்கியோவில் அரசாங்கம் மதிப்பிட்டுவந்த முழுநிதி உதவியையும் பெற்றுக்கொள்ள முடியாது என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அரசாங்கத்தின் விட்டுக்கொடுப்பில் ஏற்பட்ட தடங்கலே காரணம் எனலாம் எனக் கூறுவதை விட, இலங்கையின் மைய அரசியலில் ஏற்பட்டுள்ள போட்டி முறையான, நாட்டின் நலன் கருதாத அரசியலே காரணமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா - தமக்கு நிறைவேற்று அதிகாரம் இருப்பதாகக் கூறி, அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுசெல்ல முயற்சிக்கிறார். மறுபுறத்தில் - நாடாளுமன்றத்தில் தமக்கு பெரும்பான்மை இருப்பதால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் நடைமுறைப்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், ஜனாதிபதியை இனப்பிரச்சினைத் தீர்வில் இணைத்துக்கொள்ளப் பின்னடித்து வருகிறது.

இவ்வாறான சூழ்நிலையில்தான் - இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்புக்கள் தற்காலிக முடக்கத்துக்கு ஆளாகியுள்ளன. எனினும், தேசிய நலனில் அக்கறையில்லாமையால், ஜனாதிபதியின் தரப்பினர் விட்டுக்கொடுப்புக்கு மறுத்துவருகின்றனர்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள், வாத்தமானி மூலம நிறைவேற்றமுடியாதவை எனத் தெரிந்து கொண்டபோதிலும், மீண்டும் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தவே முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டுவருகின்றனர். இதன் இலக்கு என்ன?

தேசியநலன் கருதிய முன்னெடுப்பு இதுவல்ல. இது மாற்று அரசாங்கம் ஒன்றை, அதாவது மீண்டும் ஆட்சிக்குவரத்துடிக்கும் ஒரு முயற்சியே என முடிவாகக் கூறலாம். இதன் ஓரம்சமாகக் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியின் தலைமையில் கூடிய பொது ஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில், உள்துறை அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்பது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

தென்மாகாண சபை அமைச்சர் ரஞ்சித் கொல்லப்பட்டதை அடுத்து, பொலிஸ் துறையைக் கட்டுப்படுத்தும் உள்துறை அமைச்சின்மீது ஜனாதிபதி தமது கண்டனத்தைத் தெரிவித்து வந்தார்.

ஏற்கனவே, ஊடகத்துறை அமைச்சையும், பாதுகாப்பு அமைச்சையும் அவர் பொறுப்பேற்கப் போவதாகவும் எச்சரித்தார். ஆனால், அபிவிருத்தி லொத்தர்சபை விடயத்தில், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் அரசியலமைப்பின் கீழ் அர்த்தமற்றுப்போனதன் பின்னர், மக்கள் மத்தியில் ஜனாதிபதிக்கு இருந்த மரியாதை குறைந்துவிட்டது.

எனினும், மீண்டும் அந்த மக்களின் மரியாதையைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிக்கிறார். அதன்தொடர்பில் எடுக்கப்பட்ட முன்னெடுப்பே உள்துறை அமைச்சைப் பொறுப்பேற்கப்போவதாக விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்.

ஜனாதிபதிக்கு ஒன்று உறுதியாகிவிட்டது. தமது அதிகாரம் இருக்கிறோ இல்லையோ, ஏதாவது ஒரு துறையில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தினால், அந்தத்துறை முடங்கிப்போய்விடும். அதன்காரணமாக அரசாங்கத்தின் இயக்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யலாம் என்பதே ஜனாதிபதியின் தற்போதைய குறுந்தூர நோக்கமாகும்.

உள்துறை அமைச்சைப் பொறுப்பேற்கும் ஏதுநிலை குறித்து ஆராய, ஜனாதிபதி குழு ஒன்றை நியமித்துள்ளார். இந்தக் குழு, இரண்டுவார காலப் பகுதியில் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருக்கிறது.

கடந்த வாரம் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் மேற்கொள்ளப்பட்ட, நாடாளுமன்றத்திற்குள் மலர்வளையம் ஒன்றை எடுத்து வந்த விடயம் முக்கிய அம்சமாக இருந்தது.

1971 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்தவேளையில், வாசுதேவ நாணயக்கார, தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக, நாடாளுமன்றத்தில் மலர்வளையம் ஒன்றை எடுத்துவந்து ஸ்ரீமாவோ முன்னிலையில் வைத்த சம்பவம் இடம்பெற்றது. இதன்பின்னர், இடம்பெற்ற இரண்டாவது 'மலர்வளையம்' வைக்கப்பட்ட நிகழ்வு இப்போதே இடம்பெற்றுள்ளது.

மஹிந்தானந்த அளுத்கமகே - மலரினை சபைக்குள் எடுத்துச்சென்றார். சந்தன கத்திரியாராச்சி - வளைவு ஒன்றைச் சபைக்குள் எடுத்துச் சென்றார். இதனைக் கொண்டு சபைக்குள் வைத்தே இவர்கள் மலர்வளையத்தைத் தயாரித்தனர்.

சபைக்குள் எடுத்துவரப்பட்ட மலர் மற்றும் வளையம் தொடர்பில், நாடாளுமன்றக் காவலாளி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் - புதிதாகப் பதவியேற்கும் நாடாளுமன்றச் செயலர் பிரியாணி விஜயசேகரவுக்கு வரவேற்பளிக்கவே இவற்றை எடுத்துச் செல்வதாகக் கூறியுள்ளனர்.

ஒருவாறாக மலர்வளையம் செய்யப்பட்டு,



ரணில்

அதனை பொதுஜன ஐக்கிய முன்னணியினர் - அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் முன்னிலையில் வைத்துவிட்டனர். பின்னர் - அது ஐக்கிய தேசியக் கட்சியினால் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் வைக்கப்பட்டது. இதனையடுத்து அன்றைய தினமே அரசாங்கத்தின் பாதுகாப்புச் சீர்கேட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொதுஜன ஐக்கிய முன்னணி கொழும்பு - கோட்டையில் ஏற்பாடு செய்திருந்த பேரணி, இலக்கில்லாமல் முடிந்துவிட்டது.

இந்நிலையில், அரசாங்க அமைச்சரவைக் கூட்டம் - கடந்த புதன்கிழமை இடம்பெற்றபோது, பிரதமரின் கருத்துப்படி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தைக் கொடுப்பது சிக்கலை ஏற்படுத்தும் என்ற நிலைப்பாடு வெளியிடப்பட்டது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கி, இடையில் நின்றுள்ள சமாதான முன்னெடுப்பை நகர்த்திச் செல்லவேண்டுமென்பது பெரும்பாலான அமைச்சரவை உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

*

## 20000 மரக்கன்றுகளை குடாநாட்டில் நடத்திட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில், மரநடுகைத்திட்டமொன்றை - வன வளத் திணைக்களம் வெகு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான முன்னாயத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன்படி - சிறிய இனங்களைச் சேர்ந்த பத்தாயிரம் கன்றுகள், பெரிய இன மரக்கன்றுகளில் பத்தாயிரம் கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

நிழல்வாகை, மகோகனி, மலைவேம்பு, நெல்லி போன்ற இன மரக்கன்றுகளும் இதில் அடங்குகின்றன. இவையாவும், அரச திணைக்களங்களுக்கான தேவைகளின் பொருட்டு அவற்றினூடாக வழங்கப்படவுளளன.

யுத்தத்தாலும், மக்களின் நடவடிக்கைகளிலும் பயன்தருமரங்கள் பல அழிக்கப்பட்டுளதால், அவற்றை ஈடுசெய்யும் பொருட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ரா)

## நாவலப்பிட்டியில் நான்கு படையினர் கைதாகினர்

(கொழும்பு)

நாவலப்பிட்டியிலுள்ள தோட்டமொன்றில் புதையல் வேட்டையில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினரை, பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நான்கு இராணுவத்தினரும் கண்ணொடுவ இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஆப்கானில் தற்கொலைப் படைத் தாக்குதல்; 6 சர்வதேச அமைதிகாப்புப் படையினர் பலி!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், சர்வதேச அமைதிகாப்புப் படையினரின் பஸ் ஒன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில், ஆறுக்கும் அதிகமான சர்வதேச நாடுகளைச் சேர்ந்த படையினர் பலியாகினர்.

காபூலின் மையப்பகுதியிலிருந்து - 5 கிலோ மீற்றர்கள் தள்ளியிருக்கும் இடத்தில் இந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.



இப்பகுதிக்கண்மையில் - ஜேர்மனிய மற்றும் டச்சுத் துருப்புக்களின் படைமுகாம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கொல்லப்பட்டவர்களிலும் அநேகர் ஜேர்மன் நாட்டவர்கள் எனத் தெரியவருகிறது.

ஆப்கானில் இயங்கும் சர்வதேச அமைதிகாப்புப் படையின் பேச்சாளரான மேஜர் சாரா லுட் கருத்து வெளியிடும்போது -

இத்தாக்குதல் - யாரால் நடத்தப்பட்டது என்று தெரியவில்லை எனவும், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

தலைநகர் காபூலில் - ஐயாயிரத்திற்குமதிகமான சர்வதேச அமைதிகாப்புப் படையினர் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இத்தாக்குதலை தலிபான்கள் நடத்தியிருக்கலாம் என ஒரு தகவல் வெளியாயிருக்க, இன்னொரு தரப்போ, அல்-கொய்டா இயக்கமே இத்தாக்குதலைச் செய்திருக்கலாம் எனத் தெரிவிக்கின்றது.

## ஐரோப்பிய யூனியனில் போலந்தும் இணைய வாக்கெடுப்பு




ஐரோப்பிய யூனியனில் போலந்தும் இணைய வேண்டுமா என்பது பற்றி அங்கு வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அநேகமாக - யூனியனில் இணைவதற்குச் சாதகமாகவே மக்களாதரவு இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

# காஷ்மீரில் புதிதாகச் சண்டை; பதினைந்து பேர் ஒரேநாளில் பலி!

இந்தியாவின்- காஷ்மீரில் புதிதாக நடந்த சண்டைகளில், பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

புல்லாமா மாவட்டத்தில் நடந்த சண்டையொன்றில் 8 போராளிகள் பலியாகினர். இன்னொரு சம்பவத்தில், ஆயுததாரி ஒருவரால் கடத்திச்செல்லப்பட்ட திருமணக் கும்பலொன்றை மீட்பதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சண்டையில் இன்னும் சிலர் கொல்லப்பட்டனர்.

காஷ்மீரில் அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்காக - இந்தியாவும், பாகிஸ்தானும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கும்போது இந்தத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது, காஷ்மீரில் வன்முறைகள் பெருமளவு குறைந்துவிட்டதாக, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கூறியிருந்தார்.

# லொஸ் ஏஞ்சல்ஸ்ஸில் சிறிய விமானம் மூன்றுமாடி கட்டடத்தோடு மோதியது!



எரியும் கட்டடம்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் - மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதி மீது, சிறிய ரக விமானமொன்று திடீரென வீழ்ந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் - விமானமோட்டியும், இன்னொருவரும் உயிரிழந்ததாக தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர். இந்த விமானம், மூன்று மாடிக் கட்டடமொன்றின் மீது வீழ்ந்து நொறுங்கியதால் - அக்கட்டடமே தீப்பற்றி எரிந்தது.

விபத்துக்குள்ளான விமானம்- ஒற்றை இயந்திரம் கொண்ட 'பீச் பொனான்ஸா' ரகத்தைச் சேர்ந்தது என இனங்காணப்பட்டிருக்கின்றது.

இவ்விமானத்தின் இயந்திரம் இயங்க மறுத்ததாலேயே - விமானம் கட்டடத்தின் மீது மோதியதாக, சம்பவத்தை நேரில் கண்டோர் கூறினர்.

விமானத்தின் எரிபொருள் தாங்கியிலிருந்து சிந்திய பெற்றோல் - கட்டடத்தையண்டி நிறுத்தப்பட்டிருந்த கார்களையும் தீப்பற்றி எரியச் செய்தது.

கட்டடம் எரிவதைக் கண்ட - பலர், கட்டட ஜன்னல்கள் வழியே தரைக்குக் குதித்தனர். இதிலும் பலர் காயமடைந்தனர்.

உலகவலம்

# நெடுந்தீவில் மாணவர் எழுச்சி நாள்



மாணவர்களின் அணிவகுப்பு



நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் ஈகச்சுடர் ஏற்றுகிறார்.



நெடுந்தீவுப் பிரதேசப் பொறுப்பாளர் தேசியக்கொடியை ஏற்றுகிறார்.

# ஏழைச் சிறுவரின் உயிர் காக்கும் 'அரும்புகள்' சிறுவர் நிதியம்

அவள் ஒரு பதினொரு வயதுச் சிறுமி. யாழ்.நகரை அண்டிய கிராமம் ஒன்றில் வசித்து வருகின்றாள். பிறப்பிலிருந்தே இருதய அறையின் சுவரில் ஓட்டை இருப்பதால், பல தடவைகள் வைத்தியசாலைக்குச் சென்று வந்திருக்கிறாள். இவளின் தந்தை சிறுவயதிலேயே இறந்துவிட்டார். இவளும், இவளது இளைய சகோதரியும் சென்ற வருடம் முதல் பாடசாலை செல்வதை நிறுத்திவிட்டனர். தாயார் வீடுகளுக்குச் சென்று சிறு வேலைகள் செய்வதன் மூலம், தனது பிள்ளைகளை மிகுந்த சிரமப்பட்டுக் காத்து வருகின்றாள்.

இந்நிலையில் - இச்சிறுமியின் இருதய நோய் தீவிரமடைந்ததால், அவசர சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமென குழந்தை வைத்திய நிபுணர் ஆலோசனை வழங்கினார். ஆனால், நாளாந்த உணவிற்கே அல்லற்படும் அவர்கள் பல லட்சம் ரூபாய் பணத்திற்கு எங்கே போவார்கள்? பணம் இல்லை என்ற ஒரே காரணத்தினால் மட்டும், அவள் மேலதிக சத்திரசிகிச்சை செய்யவில்லை. பதிலாக, விரைவில் நிகழப்போகும் மரணத்திற்காகக் காத்திருந்தாள்.

இது அண்மையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம். எமக்குத் தெரியாமலேயே நடக்கும் நிஜங்களில் இதுவும் ஒன்று. இவள் போல் பல சிறுவர்கள் பணம் இல்லை என்ற காரணத்தினால் மேலதிக சிகிச்சைகள் செய்யாமல் எமது கண் முன்னே இறக்கும் சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்துள்ளன.

இவர்கள் யார்? இவர்கள் எமது குழந்தைகள், எமது சகோதரர்கள், எமது தேசத்தின் எதிர்காலச் சமுதாயம். இச்சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

## மருத்துவ மாணவரின் அருமுயற்சி

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள எமது தேசத்தின் ஏழைச் சிறுவர்களுக்கு, மேலதிக சிகிச்சைகளை வழங்கி, அவர்களுக்கும் வளமான எதிர்காலம் ஒன்றைக் கிட்டச் செய்வதற்காகவே 'அரும்புகள்' எனப்படும் இந்நிதியம் மருத்துவ மாணவர்களினால் ஆரம்பிக்கப்படுகின்றது. நம்மில் பலருக்கு உதவி செய்ய மனமும், தர்மம் செய்யப் பணமும் இருந்த போதிலும் - அதனை எங்கே, எவ்வாறு கொடுப்பது எனத் தெரியாமல் இருக்கிறோம். அவர்களுக்கான சிறந்த நிதியமாக 'அரும்புகள்' இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நாம் உழைக்கும் பணத்தில், நமது அடுத்த பிறப்பிற்கும் உதவுவது நாம் செய்யும் தான தர்மமுமே எனப் பெரியோர்கள் கூறுவதுண்டு. எனவே, மருத்துவ மாணவர்கள் தமது அருமுயற்சி வெற்றியடைய- உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரு மனது படைத்தோரிடமிருந்து நிதியுதவிகளை எதிர்பார்க்கின்றார்கள்.

இந்நிதியத்தின் வங்கிக் கணக்கு- மருத்துவ மாணவர் ஒன்றியத்தினால், குழந்தை வைத்திய நிபுணர் மற்றும் ஏனைய வைத்திய நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் பேணப்படும். இச் சிறுவர்களுக்கான நிதியுதவிகள் யாவும் குழந்தை வைத்திய நிபுணரினதும், யாழ்.மருத்துவ பீடப் பீடாதிபதியினது முறையான பரிந்துரைப்புடன், குடும்ப நிலைமை ஆராயப்பட்டே வழங்கப்படும்.

பணம் வழங்க விரும்புபவர்கள், நேரடியாக- இலங்கை வங்கி, மேற்றரக்கிளை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், கணக்கு இலக்கம்:- 5-21-2022431-4 இல் வைப்பிலிடலாம். மேலதிக விபரங்களுக்கு 021-222134 அல்லது **e-mail-Hifmj@Sltnet.lk** இல் மருத்துவ மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இவர்கள் எங்கள் குழந்தைகள். நாம் வழங்கப்போகும் ஒவ்வொரு பணமும் குழந்தைகள் உயிர்காக்கும்.

**"தர்மம் தலை காக்கும"**.

# நினைவுப் பிரார்த்தனை

**கோப்பாய் - இணுவில்**

**திரு. கந்தையா ஆறுமுகம் (ஆசிரியர்)**

| தவப்பேறு | | சிவப்பேறு |
|---|---|---|
| 21 |  | 08 |
| - | | - |
| 12 | | 05 |
| - | | - |
| 1918 | | 2003 |

எந்தையே! எம்மை ஆளாக்கிய தெய்வமே! - இனி எப்பிறப்பிற் காண்போம்......?

**இன்று முற்பகல் 11 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)
மனைவி, குடும்பத்தவர்கள்.

*28, கைலாசபிள்ளையார் வீதி,*
*நல்லூர்.* (371)

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் (கச்சேரி) ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கான வெற்றிடம்.

**சுருக்கெழுத்தாளர் சேவைக்குறிப்பின்படி ஆங்கில சுருக்கெழுத்தாளருக்கு உரிய தகைமைகளை உடையவர்கள் வேறு இடத்திலிருந்து இங்கு இடமாற்றம் பெற்றோர் அல்லது மீளச் சேவையிலோ கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடமையாற்ற விரும்புபவர்களும், எதுவித வேலையிலும் இல்லாத ஆங்கில சுருக்கெழுத்தாளருக்குரிய தகைமையும், கணனி அறிவுடையவர்களும் விண்ணப்பிப்பதுடன் 25.06.2003 இற்கிடையில் நேரில், அலுவலக நாளில் சுயவிவரத்துடன் சமூகமளிக்கவும். அடிப்படைத் தகுதி இல்லாதவர்கள் விண்ணப்பிக்கவேண்டியதில்லை.**

*தி.இராசநாயகம்,*
*அரசாங்க அதிபர் ,*
*கிளிநொச்சி மாவட்டம்*

(சி-1063)

நிரஞ்சனாஸ் சங்கானை
விஜய், சாலினி,
தாமு, ராதாரவி நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 9.45 (பு.நே)
The Rock The scorpion king
(சி-974)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்றுமட்டும்
விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்
நடித்த
புதிய கீதை
10.30, 2.30, 6.30 மட்டும்
BEHIND ENEMY LINES
(WAR FILM)
இன்று 9.30 இற்கு மட்டும்
(சி-973)



அன்பளிப்பு
தொழிற்சாலையில் அல்லது எமது விற்பனை வாகனத்தில் 10 மில்க்வைற் சோப் மேலுறைகளைக் கொடுத்து, மரக்கன்று வாங்கி நாட்டி சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
525/2, கே.கே.எஸ்.வீதி,
த.பெ.இல. 77
யாழ்ப்பாணம்.
(சி-972)

தேவை
வைத்திய உத்தியோகத்தர்
பகுதி நேரம் / முழு நேரக் கடமைகளுக்கு
தொடர்பு:
வைத்தியப் பணிப்பாளர்,
சென்றல் நேர்சிங் ஹோம்,
350, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(369)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறுவர் நாடாளுமன்றத்தில் பிரச்சினைகள் ஆராயப்பட்டன!

'சிறுவர் செயற்பாட்டிற்கான அழைப்பு' என்னும் கருப்பொருளில் சிறுவர் அனுபவிக்கும் பிரச்சனைகளை வெளிப்படுத்தி, அவற்றிற்கு உரியவர்களால், உரிய தீர்வினைப் பெறும் பொருட்டு 'சிறுவர் நாடாளுமன்றம்' - நேற்று, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில், இந்நிகழ்வில் - மங்கள விளக்கினை அருட்தந்தை டேமியனும் சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் இணைப்பாளர் செல்வரட்ணமும் ஏற்றினர்.

பின்னர்- தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றியும், தமக்கு எதிரான பிரச்சனைகள் பற்றியும் சிறுவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. இதன்போது - கல்வி, சுகாதாரமும் போஷாக்கும் ஆகிய விடயங்கள் குறித்து முக்கியமாக சிறுவர்களால் இனங்காட்டப்பட்டன.

சிறுவர்களின் இப்பிரச்சனை தொடர்பாக - தீவகக் கல்விப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ். மாவட்ட நீதிபதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ரவிராஜ் ஆகியோரும் சிறுவர்களின் பெற்றோரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உரையாற்றுகையில் - இப்போது எமது சிறுவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எமக்கென்றதொரு நிர்வாக அலகு ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான நிர்வாக அலகினால்தான் சிறுவர்கள் அனுபவிக்கும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம் எனத் தெரிவித்தார். (லி)

# அப்பாவைக் கொன்றவருடன் கூட்டணி; சந்திரிகாவின் பிள்ளைகள் விரும்புவார்களா?

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் அஸ்வர் கேள்வி

தனது கணவரைக் கொன்ற ஜே.வி.பியினருடன், கூட்டணியமைக்க ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்து வருகிறார். இவரது இந்த நடவடிக்கையை, மகள் யசோதராவும், மகன் விமுக்தியும் அனுமதிப்பார்களா என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் எ.எச்.எம். அஸ்வர், நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

கண்டி மாவட்ட பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன், கொண்டுவந்த பிரேரணையொன்றுக்குப் பதிலளித்து உரையாற்றியபோதே, அமைச்சர் அஸ்வர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நாம் எதிரணியில் இருந்தபோது, மக்கள் எழுச்சிப் பேரணியை நடத்தினோம். அப்போது, ஆட்சியாளர்களின் அடியாட்களால் தாக்கப்பட்டோம். முன்னாள் சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத்கூட தாக்கப்பட்டார்.

இப்போதுதான் நாட்டில் மனிதப் படுகொலைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியால் அமைதி நிலவுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே.முவுடன் தேசிய அரசாங்கம்; கதிர்காமர் இடைக்காலப் பிரதமர்!

## ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய திட்டம் இது

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து, தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் - தேசிய அரசாங்கத்தின் பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமரை நியமிப்பதற்கும் ஜனாதிபதி சந்திரிகா விருப்பம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியுடன் கூட்டு அமைப்பதில், சில சிக்கல்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்நோக்கி வருகிறது. இந்த நிலையில், பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள், ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதைவிட, ஐக்கிய தேசிய முன்னணியுடன் அரசியல் இணக்கப்பாட்டுக்கு வரவே விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில்தான் ஜனாதிபதி சந்திரிகா - லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராக நியமிக்கவும், தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் விருப்பம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறார். ரணில் ரோக்கியோவுக்குப் புறப்பட முன்னரும், லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து தேசிய அரசு அமைப்பது குறித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது.

அநுரா பண்டாரநாயக்கவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முறுகல் அதிகரித்துள்ள நிலையிலேயே, லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராக நியமிக்கும் தேசிய அரசுக்கு ஜனாதிபதி ஆதரவளிக்க முன்வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய அரசு அமைக்கும் திட்டத்தினை ஜனாதிபதி சந்திரிக்காவிடம் முன்வைத்ததாகவும், இதனை ஜனாதிபதி நிராகரித்துவிட்டதாகவும் மற்றுமொரு செய்தி தெரிவித்தது.

## திருமலை நகரில் நேற்றும் தேடுதல்

திருகோணமலை நகரின் மத்திய பகுதி, நேற்றுக்காலை பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதல் வேட்டையின் போது - சிங்கள சமூகத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில், ஐந்து பேர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை ஆறு மணியளவில் வீடுவீடாக இந்தச் சோதனை நடத்தப்பட்டது. விடுவிக்கப்பட்ட ஐந்துபேர் தவிர, ஏனைய மூவரையும் மேலதிக விசாரணைக்காக, சோதனை நடத்திய துறைமுகப் பொலிஸார் திருகோணமலை நகரப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.(10)

# ஆரையம்பதியில் கிரனைட் வீச்சு; தந்தையும்,மகளும் பலியாகினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஆரையம்பதி கண்ணகி அம்மன் கோவில் வீதியில், நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலொன்றில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதுடன் சிறுமி ஒருத்தி காயமடைந்தார்.

முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினரான சின்னையா சாமுவேல் (வயது 37), அவரது இரண்டு வயதுக் குழந்தையான சாமுவேல் அபிஷா ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றொரு மகளான 8 வயதுச் சிறுமி காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இம்மூவரும், சைக்கிளில் கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியிலேயே, தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சின்னையா சாமுவேல், முன்னர் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் வரதர் அணியில் இருந்து விலகி, மேசன் தொழில் செய்துவந்தவர் எனறும் கூறப்படுகிறது.

## ஈ.பி.டி.பி....

இ.விஜயானந்தன் (வயது 33) என்ற இளைஞனே, நேற்று அதிகாலை வேளை, அவரது உணவு விடுதிக்கு முன்பாக பூந்தோட்டத்திற்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த சமயம் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

இதேவேளை -

இச்சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

## திருமலையில்....

இந்த தாக்குதல் சம்பவத்தில் தர்மகர்த்தா சபைத் தலைவர் எஸ். சுப்பிரமணியமும் (வயது 71), இவருடன் கதைத்துக் கொண்டிருந்த கிராம அலுவலர் கிருபானந்தனும் (வயது 53) படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (சு-10)

# இடைக்கால நிர்வாகம்....

இடைக்கால நிர்வாகம் பற்றி - ஏற்கனவே, நீண்டகாலத்திற்கு முன்பே நாம் கலந்துரையாடிவிட்டோம். இப்போது - தெளிவான, உறுதியான விளக்கங்கள்தான் தேவைப்படுகின்றன எனவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை - இருதரப்புக்களுக்கும் இடையே, இடைக்கால நிர்வாகம் பற்றி பெரியளவு வேறுபாடுகளைக் காணமுடியவில்லை எனப் பிரதமர் ரணில் தெரிவித்தது பற்றிக் குறிப்பிட்ட அன்ரன் பாலசிங்கம் -

விடுதலைப் புலிகளின் தலைமை பிரேரித்ததறகும், அரசாங்கம் வழங்க முன்வந்ததற்கும் தீவிரமான வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன என 'தமிழ்நெற்' இணையத்தளத்திற்குத் தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான எதிர்காலப் பேச்சுக்கள் - புதிய மற்றும் மீள் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின்படியே அமையமுடியுமென்றும் அப்போது அவர் தெளிவுபடக் கூறினார்.

## சந்திரிகா....

சந்திரிகாவுடன் பேச முயற்சி செய்திருந்தார்.

ஆனால்- தொலைபேசி மூலமும், ஜனாதிபதியுடன் அவரால் தொடர்பு கொள்ள முடியவில்லை.

வெளிநாடுகளில் முக்கிய பயணங்களைப் பிரதமர் மேற்கொள்வதற்கு முன்பாக, ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை செய்வது வழக்கமாக இருந்தபோதும், ரோக்கியோ செல்ல முன்னர், பிரதமரைச் சந்திப்பதை ஜனாதிபதி தவிர்த்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்



- மணப்பெண் அலங்காரம்
- சிகை அலங்காரம் [Hair Style]
- சாறி டிசைன்
- முகப்பரு, கரும்புள்ளி போன்றவற்றுக்கு சிகிச்சைகளும் வழங்கப்படும்

திருமதி நளினி சிவகுமாரன்
(Principal NalineS Institute of Herbal, Aroma Therapy And Beauty Clinic)



ஜூன் 2003 14 ஆம், 15 ஆம் திகதிகளில்
நேரம் : காலை 10.00 - 2 மணிவரை
இடம்: 393 / 48 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 365360, 503138, 0777 - 383846.

உயர்ந்த தரம் குறைந்த விலை SIS பொறிக்கப்பட்ட
மிற்சுபி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
அதுதான்!
ஹினோடே சீமெந்து







பாவனையாளர்களே!
நீங்கள் தெரிவு செய்யும் சீமெந்து எப்பொழுதும் SIS பொறிக்கப்பட்டதாக இருக்கட்டும்.
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர்!

கல்வியியல் வெளியீடு
கல்வியியலில் செயல் நிலை ஆய்வு
Action Research in Educatuion
கல்விசார் கற்கைநெறியில் புதிய வடிவமான செயல்நிலை ஆய்வு பற்றிய முதல் ஆய்வு நூல், கல்வியியலில் டிப்ளோமா கற்கை நெறியினருக்கும், B.Ed, M.Ed பயில்பவர்களுக்குமான நூலாக வெளியிடப்பட்டுள்ளது.
இதழாசிரியர்கள்
திரு. பா.தனபாலன் (உப பீடாதிபதி யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி)
திரு.ப.இராஜேஸ்வரன் (ஆசிரியர்) (சி/1065)
கிடைக்கும் இடங்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீ லங்கா புத்தகசாலை

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.